# மலர்ந்த ஜீவியம்

ஸ்ரீ அரவிந்தர் ஸ்ரீ அன்னை யோக மலர்

Vol. II Issue 10 January 2013

இம்மாத மலரில்....

பொருளடக்கம்


பக்கம்

லைப் டிவைன் ........ 2
கள்வனின் காவல் ........ 20
இம்மாதச் செய்தி ........ 34
சாவித்ரி ........ 35
யோக வாழ்க்கை விளக்கம் VI ........ 37
பூரணயோகம் - முதல் வாயில்கள் ........ 42
அஜெண்டா ........ 47
அன்பர்களும் அன்றாட வாழ்க்கை நெறிமுறைகளும் ........ 49
Infinityயினுடைய ஆற்றல் (பாகம் 2) ........ 59
ஸ்ரீ அரவிந்தரும் மரபும் ........ 63


* * *

கதை, கட்டுரைகளில் வரும் பெயர்கள் யாரையும் குறிப்பிடுவன அல்ல.


வருடச் சந்தா ரூ.60/-
தனிப் பிரதி ரூ.5/-


## ஜீவியத்தின் ஓசை

தன்னை பிரம்மமாக அறியும் வரை பிரம்மம் சித்திக்காது.

அகத்தில் விழித்த பிரம்மம் புறத்தில் சித்திக்கும்.

பிரம்மம் மனிதனில் தன்னை-யறிவது பிரம்ம சித்தி.

மனிதன் பிரம்மத்தை அறிய முடியாது.

பிரம்மம் மனிதனை பிரம்மமாக அறியும்.

# லைப் டிவைன்

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

*கர்மயோகி*

## XXIV. Matter

*Page 231*
*Para 1*

Life is not an inexplicable dream.
Nor is it an impossible evil.
It has become a dolorous fact.
Thus we are rationally assured.
It is a mighty pulsation.
It is a pulsation of the divine All-Existence.
We see something of its foundation.
We see also its principle.
We look up to its high potentiality.
Also to its divine out-flowering.

There is one principle below all the others.
We have not yet sufficiently considered.
It is the principle of Matter.
Life stands upon it.
It stands as upon a pedestal.



## 24. ஜடம்

*வாழ்வு புரியாத புதிரான கனவல்ல.*
*வாழ்வு உலகிலில்லாத தீமையுமில்லை.*
*சாரமற்ற விளக்கமாக அது மாறவுமில்லை.*
*இப்படிப் பகுத்தறிவு நமக்கு உறுதி கூறுகிறது.*
*வாழ்வு பெரும் பலன் பெற்ற விம்மும் கடலலை.*
*தெய்வீக அனைத்து வாழ்வின் அலையது.*
*நாம் அஸ்திவாரத்தைச் சற்றுக் காண்கிறோம்.*
*அதன் தத்துவத்தையும் காண்கிறோம்.*
*அதன் பெரும் திறமை புதைந்திருப்பதை எதிர்பார்க்கிறோம்.*
*அதன் இதய மலர்ச்சி இறைவனின் பரிணாமப் பரிமளமாகும் என நினைக்கிறோம்.*
*எல்லாவற்றிற்கும் கீழே ஒரு தத்துவம் உண்டு.*
*போதுமான அளவுக்கு அதை நாம் இன்னும் ஆராயவில்லை.*
*அது ஜடம் என்ற தத்துவம்.*
*வாழ்வு அதில் காலையூன்றி நிற்கிறது.*
*பீடத்தின் மீது நிற்பது போல் வாழ்வு நிற்கிறது.*

Out of which it evolves.
It evolves like the form of a many-branching tree.
Out of its encasing seed.
This is a physical principle.
The mind, life and body of man depend upon it.
This is out-flowering of Life.
It is the result of Consciousness emerging into Mind.
It expands and elevates itself.
It does so in search of its own truth.
It is in the largeness of the supramental existence.
Yet it is conditioned by the case of body.
And it is done by the foundation of Matter.
The importance of the body is obvious.
Or he has been given a body.
And a brain.
They are capable of receiving.
They serve a progressive mental illumination.
Man has risen above the animal.
Equally it can be done by developing a body.
A physical instrument functions.
It receives and serves.
It serves a still higher illumination.
So that man can rise above.
And realise.
Not merely in thought.
And in his internal being.
But in life.



*வாழ்வு ஜடத்திலிருந்து பரிணாம வளர்ச்சி பெறுகிறது.*
*பல கிளைகளாகத் தழைக்கும் மரமாக வளர்கிறது.*
*வித்திலிருந்து மரம் எழுவதைப் போன்றது அது.*
*இது ஜடமான தத்துவம்.*
*மனம், உயிர், உடல் இதை நம்பியுள்ளது.*
*இது வாழ்வு பூரித்தெழுவது.*
*ஜீவியம் மனமாக பரிணாம வளர்ச்சி பெறுவதன் பலனிது.*
*வாழ்வு பரந்து உயர்கிறது.*
*தன்னுடைய சத்தியத்தைத் தேடி வாழ்வு மலர்கிறது.*
*சத்திய ஜீவியப் பெருவாழ்வினுள் பரிணாமம் செல்ல முயல்கிறது.*
*எனினும் உடல் எனும் கூடு அதன் வளர்ச்சியை நிர்ணயிக்கிறது.*
*ஜடம் என்ற அடிப்படையில் அது நடக்கிறது.*
*உடல் முக்கியம் என்பது தெளிவு.*
*மனிதனுக்கு உடல் தரப்பட்டுள்ளது.*
*மூளையும் உடன் வருகிறது.*
*உடலும் மூளையும் வளர்ச்சியைப் பெறும்.*
*படிப்படியான ஜோதி மலர அவை துணை செய்கின்றன.*
*விலங்கை விட உயர்ந்து மனிதன் வளர்கிறான்.*
*உடலை வளர்த்தும் இதே பலனைப் பெறலாம்.*
*உடல் என்ற கருவி செயல்படுகிறது.*
*பெற்றுப் பெறுவதால் சேவை செய்கிறது.*
*உடல் உயர்ந்த கருவிக்குச் சேவை செய்கிறது.*
*இதனால் மனிதன் உயரலாம்.*
*உயர்வதால் சித்தி பெறலாம்.*
*உயர்வு எண்ணத்தில் மட்டுமல்ல.*
*அக வாழ்வு மட்டும் உயரவில்லை.*
*மனிதன் வாழ்வில் உயர்கிறான்.*

A perfectly divine manhood.

Otherwise, two possibilities arise.
Promise of Life is cancelled.
Its meaning annulled.
An earthly being can only realise Sachchidananda.
By abolishing itself.
By shedding from it mind, life and body.
And returning to the pure Infinite.
Or else man is not a divine instrument.
There is a destined limit.
The limit is to the consciously progressive power.
It distinguishes him.
From all other terrestrial existence.
And he has replaced them in the front of things.
So another must eventually replace him.
And assure his heritage.

Body is the soul's great difficulty. *Page 232*
It is from the beginning. *Para 2*
Body is the continuous stumbling block.
It is a rock of offence.
Therefore the eager seeker hurled his ban against the body.
He has a disgust for the world.
This is a world-principle.
Above all else he hates the body.



*இறைவனுடைய மனிதத் தன்மையைச் சிறப்பாக அவன் பெறுகிறான்.*

*இரு சந்தர்ப்பங்கள் எழும்.*
*வாழ்வின் வாய்ப்பு ரத்தாகும்.*
*வாழ்வின் அர்த்தம் அர்த்தமற்றதாகும்.*
*பூமியில் பிறந்தவன் சச்சிதானந்தம் மட்டுமே பெறுவான்.*
*இதைப் பெற மனிதன் தன்னை அழித்துக் கொள்ள வேண்டும்.*
*மனம், உயிர், உடலை இழந்து இதைப் பெற வேண்டும்.*
*தூய அனந்தத்தை அடையலாம்.*
*இல்லையேல் மனிதன் தெய்வக் கருவியாக முடியாது.*
*அப்பொழுது அளவு விதிக்கப்படும்.*
*தன்னையறிந்து முன்னேறுவதற்கு லிமிட் ஏற்படும்.*
*இது மனிதனைத் தனிமைப்படுத்திக் காட்டும்.*
*இதர சிருஷ்டியினின்று மனிதன் பிரிந்து நிற்பான்.*
*அனைவரையும் கடந்து முன்னே வருவான்.*
*எனவே வேறொன்று அவனைக் கடந்து செல்ல வேண்டும்.*
*அவன் பிதிராஜ்யத்தைப் பெற வேண்டும்.*

*உடல் ஆத்மாவுக்குச் சிரமம் தர வல்லது.*
*இது ஆரம்ப நாட்களிலிருந்து உள்ளது.*
*உடல் தொடர்ந்து இடறி விழும் தடையாயுள்ளது.*
*அது முயற்சியை விரக்தியாக்கும் மலை.*
*எனவே ஆர்வமான தபஸ்வி உடலுக்குத் தடை விதித்துவிட்டான்.*

*தவசிக்கு உலகம் வெறுப்புத் தருவது.*
*இவ்வெறுப்பு உலகம் ஏற்கும் தத்துவம்.*
*மற்றவை விட உடலைக் குறிப்பாக அவன் வெறுக்கிறான்.*

It is an especial object of loathing for him.
The body is an obscure burden.
He cannot bear it.
It has an obstinate material grossness.
It is an obsession.
It drives him for deliverance.
The life of the ascetic is sought.
He wants to get rid of it.
He denies its existence.
He denies its reality of material existence.
Religions put their curse on Matter.
Most of them do so.
They have made the refusal.
Or resigned temporary endurance of the physical life.
It is the test of true spirituality.
The older creeds were more patient.
They were broodingly profound.
Our souls are under the burden of iron age.
It is of feverish impatience.
They are tortured.
The older creeds were not touched by this.
This is a formidable division.
They did not make.
They acknowledged Earth and Heaven.
Earth was Mother, Heaven was Father.



*வெறுப்புக்குக் குறிப்பாகத் தகுதி பெற்றது உடல்.*
*உடல் இருண்ட பாரம்.*
*அவனால் தாங்க முடியாத பாரம் இது.*
*அதன் ஜடமான முரட்டுத்தனம் பிடிவாதமானது.*
*அவனை அது பிசாசாகப் பிடித்து உலுக்குகிறது.*
*விடுதலையை நாடி அவன் ஓடுகிறான்.*
*விரதமும் நோன்பும் நிறைந்த துறவறத்தை நாடுகிறான்.*
*உடலைத் தவிர்க்க முனைகிறான்.*
*உடல் என ஒன்றில்லை என்கிறான்.*
*ஜடமான வாழ்வு பெற்றது உடல் என்பதை மறுக்கிறான்.*
*மதங்கள் ஜடத்தைச் சபித்தன.*
*பெரும்பாலான மதங்கள் அப்படிப்பட்டவை.*
*மறுப்புத் தெரிவித்தன.*
*தற்காலிகமாக உடலை ஏற்கின்றன, உடல் வாழ்வை ஏற்கின்றன.*

*ஆன்மீக வாழ்வுக்கு அதைச் சோதனையாக்கின.*
*பழங்காலக் கொள்கைகள் பொறுமையானவை.*
*அவை தம் ஆழ்ந்த சிந்தனையால் ஆழத்தைத் தொட்டன.*
*கலியுகத்தில் நம் ஆத்மா பாரத்தைத் தாங்குகிறது.*
*இவை பொறுமையிழந்து கொந்தளிக்கின்றன.*
*இது சித்ரவதை.*
*பழம் கொள்கைகளை இது தீண்டவில்லை.*
*இது பெரும் பிரிவு.*
*அவை இப்படிப் பிரிக்கவில்லை.*
*பூமியையும் சொர்க்கத்தையும் ஏற்றனர்.*
*பூமியை பூமாதேவி எனவும் சொர்க்கத்தைப் பிதா எனவும் கூறினர்.*

They accorded them equal love and reverence.
They are ancient mysteries.
They are obscure and unfathomable.
It is so whether our view is materialistic or spiritual.

They cut the Gordian knot of the problem of existence.
They do so with one decisive blow.
They accept an escape into an eternal bliss.
Or an eternal annihilation or eternal quietude.

There is a quarrel. *Page 232*
We see it when we awaken to our spiritual possibility. *Para 3*
It does not commence there.
Life appears.
It begins with this.
Life struggles to establish its activities.
There are forces of inertia.
Life tries to establish its permanent aggregations of living form.
It does against the force of inconscience.
Against the force of atomic disaggregation.
They are in the material principle.
They are the knot of the great Denial.
Life is at constant war with Matter.
The battle seems to end.



*இரண்டையும் அன்புடன் மதித்தனர்.*
*அவை புராதனப் புதிர்கள்.*
*அவை இருளடர்ந்தவை, ஆழங்காண முடியாதவை.*
*நாத்திகவாதியும், ஆன்மீகவாதியும் இந்த விஷயத்தில் ஒன்றாக நினைக்கின்றனர்.*

*வாழ்வின் பிரச்சினை என்ற சிக்கலை அவர்கள் உடைக்கின்றனர்.*
*ஒரேயடியில் ஒழித்துக்கட்டுகின்றனர்.*
*சாஸ்வதானந்தம் பெற இதைச் செய்கின்றனர்.*
*நிரந்தர அமைதி அல்லது நிரந்தர அழிவை ஏற்கின்றனர்.*

*ஒரு போராட்டம் உள்ளது.*
*நம் ஆன்மீக வாய்ப்பை அறிந்தால் போராட்டம் தெரியும்.*

*தெரிவது அறிவதிலாரம்பிக்கவில்லை.*
*வாழ்வு வெளிப்படுகிறது.*
*பிணக்கை வாழ்வு வெளிவந்தவுடன் நாம் காண்கிறோம்.*
*வாழ்வு தன் செயல்களை ஸ்தாபிக்கப் போராடுகிறது.*
*தாமஸ சக்திகளுண்டு.*
*நிலையான ஜீவனுள்ள ரூபங்களைச் சேர்த்து ஸ்தாபிக்க வாழ்வு போராடுகிறது.*
*ஜீவியமற்ற சக்திகளை எதிர்த்து வாழ்வு முனைகிறது.*
*அணுவைச் சிதைக்கும் சக்திகளை எதிர்த்தும் செயல்படுகிறது.*
*அவை ஜட தத்துவத்திலுள்ளன.*
*பெரு மறுப்பின் முடிச்சு அவை.*
*வாழ்வு ஜடத்துடன் இடைவிடாமல் போராடுகிறது.*
*போராட்டம் முடிவதாகத் தெரிகிறது.*

It ends in the apparent defeat of Life.
It collapses downward.
It falls on the material principle.
We call the material principle death.
Mind appears.
The discord deepens.
Mind has its limitations.
Mind has its own quarrels.
It quarrels with Life and Matter.
Mind is in constant subjection to inertia.
Mind revolts against Matter.
It revolts against the passions and sufferings of the other.
The battle turns eventually towards the vital.
It is not very sure.
It is towards a partial and costly victory for the Mind.
Mind slays the vital cravings.
It impairs the physical forces.
Mind disturbs the balance of the body.
It does so in the interests of mental activity.
It does so in the interests of a higher moral being.
The impatience of Life, the disgust of the body recoil.
Pure mental and moral existence take their rise.
Man awakens to an existence beyond Mind.
He carries it further.



*முடிவில் வாழ்வு தோற்பது போல் தெரிகிறது.*
*தோற்றுக் கீழே விழுகிறது.*
*தோற்று ஜடத்தில் முடிகிறது.*
*ஜடத்தை நாம் மரணம் என்கிறோம்.*
*மனம் வருகிறது.*
*பிணக்கு வளர்கிறது.*
*மனத்திற்கு வரையறையுண்டு.*
*மனமும் போராட்டத்திலுள்ளது.*
*மனம் வாழ்வு ஜடத்துடன் போராடுகிறது.*
*தமஸுக்கு உட்பட்டுள்ளது.*
*மனம் ஜடத்தை எதிர்த்துப் புரட்சி செய்கிறது.*
*ஜடத்தின் வேதனை, பாசத்தை எதிர்த்துப் புரட்சி செய்கிறது.*

*வாழ்வை எதிர்த்து மனம் போராடுகிறது.*
*போராட்டம் இப்படித் திரும்புவது நிலையில்லை.*
*பகுதியான வெற்றியை சிரமப்பட்டு மனம் பெறுகிறது.*

*உயிரின் ஆசைகளை மனம் அழிக்கிறது.*
*ஜட சக்திகளை அது சிதைக்கிறது.*
*உடலின் நிதானத்தை மனம் கலைக்கிறது.*
*மனம் செயல்பட வேண்டி இதைச் செய்கிறது.*
*பெரிய தர்மத்திற்காக மனம் இதைச் செய்கிறது.*
*வாழ்வின் அவசரமும், உடலின் வெறுப்பு பின்வாங்குகின்றன.*

*மனத்தின் தார்மீக வாழ்வு எழுகிறது.*
*மனிதன் மனத்தைக் கடந்த வாழ்வை நாடுகிறான்.*
*அதை மேலும் தொடர்கிறான்.*

It is beyond this discord.
Mind, Body, Life are condemned.
They are called the trinity of the world.
They are called flesh and devil.
Mind too is banned.
It is called the source of the malady.
War is declared between the Spirit and its instruments.
The victory of the spiritual inhabitant is sought.
It is sought in an evasion.
Evasion is from a narrow residence.
It is sought in the rejection of mind.
Life and body are evaded.
They withdraw into their own infinitude.
The world is a discord.
We shall solve its perplexities.
It is done by increasing the discords.
It is a cutting away and final severance.

These defects and victories are only apparent. *Page 233 Para 4*
This solution is not a solution.
It is an escape from the problem.
Life is not really defeated by Matter.
It makes a compromise.
It uses death for the continuance of life.
Mind is not really victorious over Life and Matter.



*அது இப்பிணக்கைக் கடந்து செல்கிறது.*
*மனம், உடல், உயிரை வெறுக்கிறார்கள்.*
*உலகின் திருமூர்த்திகளென அவை அழைக்கப்படுகின்றன.*
*அவற்றைப் பேயெனும் உடலென்கின்றனர்.*
*மனமும் தடை விதிக்கப்படுகிறது.*
*மனம் நோயின் மூலமாகக் கருதப்படுகிறது.*
*ஆத்மாவும் அதன் கருவிகளும் போரில் இறங்குகின்றன.*

*உள்ளுறை ஆத்மாவின் வெற்றியை நாடுகிறார்கள்.*
*வெற்றியை நாட விஷயத்தை விலக்குகின்றனர்.*
*வாழ்வின் குறுகிய உலகை விலக்குகின்றனர்.*
*மனத்தை விலக்கி வெற்றியை நாடுகிறார்கள்.*
*உடலையும் உயிரையும் ஒதுக்குகிறார்கள்.*
*அவற்றின் அனந்தத்தில் தஞ்சம் புகுகின்றனர்.*
*உலகம் பிணக்காலானது.*
*அதன் சிக்கல்களை நாம் அவிழ்க்கலாம்.*
*பிணக்கை முழுமைப்படுத்தித் தீர்க்கலாம்.*
*வெட்டி விலக்கும் முறையிது.*

*இந்த வெற்றி தோல்விகள் எல்லாம் தோற்றமே.*

*இந்தத் தீர்வு, தீர்வாகாது.*
*பிரச்சினையைத் தவிர்க்கும் வழியிது.*
*ஜடம் வாழ்வைத் தோற்கடிக்கவில்லை.*
*ஒரு மாதிரி விட்டுக் கொடுக்கிறது.*
*வாழ்வு நீடிக்க மரணத்தைப் பயன்படுத்துகிறது.*
*மனம் வாழ்வையும் ஜடத்தையும் வெல்லவில்லை.*

It has achieved only an imperfect development.
It is of some of its potentialities.
At the cost of others.
They are bound up with the unrealised or rejected possibilities.
They are possibilities of its better use of life and body.
There is the lower triplicity.
The individual soul has not conquered it.
Only rejected their claim upon it.
It is a claim of work.
The Spirit has undertaken it.
It did so when it first cast itself into form of universe.
The labour of the Divine continues.
It is in the universe.
Therefore the problem continues.
It is without any satisfying solution of the problem.
Nor any victorious accomplishment of the Labour.
Therefore we must seek a solution.
We have a stand point.
It is about Sachchidananda.
It is the beginning, middle and end.
The struggle and discord cannot be eternal.
They are not the fundamental principles in His Being.
Their very existence implies something.



*அரைகுறையான முன்னேற்றத்தை மட்டுமே கண்டது.*
*உள்ள சில வாய்ப்புகளில் பெற்ற முன்னேற்றமது.*
*மற்றதை இழந்து பெற்ற முன்னேற்றமிது.*
*அவை இதுவரை பயன்படாதவை அல்லது மறுக்கப்பட்டவை.*

*வாழ்வையும் உடலையும் அதிகமாக நல்ல முறையில் பயன்படுத்தும் வாய்ப்புகள் அவை.*
*மனம், உயிர், உடல் உண்டு.*
*ஜீவாத்மா அவற்றை வெல்லவில்லை.*
*அவற்றின் உரிமையை மறுத்தது.*
*அது செயல்படும் உரிமை.*
*ஆத்மா மேற்கொண்ட கடமை அது.*
*உலகம் என்ற ரூபத்தை மேற்கொண்ட பொழுது ஏற்பட்ட உரிமை.*

*இறைவனின் பணி தொடர்கிறது.*
*இறைவனுக்கு உலகில் பணி அமைந்துள்ளது.*
*எனவே பிரச்சினை தொடர்கிறது.*
*பிரச்சினைக்குத் திருப்தியான தீர்வு எழவில்லை.*
*செய்த வேலைக்கு எந்த வெற்றிகரமான முடிவும் வரவில்லை.*
*எனவே நாம் ஒரு தீர்வு காண வேண்டும்.*
*நமக்குள்ள ஆதாரமுண்டு.*
*அது சச்சிதானந்தத்தைப் பற்றியது.*
*அதுவே ஆரம்பமும், மையமும், முடிவுமாகும்.*
*எனவே போராட்டமும் பிணக்கும் நிரந்தரமானதல்ல.*
*சச்சிதானந்த ஜீவனுக்கு அவை அடிப்படையானவையல்ல.*

*போராட்டம் முடிவைச் சுட்டிக் காட்டுகின்றது.*

They imply a perfect solution and complete victory.

We must seek a solution in a real victory.
It is a victory of Life over Matter.
It must be a perfect use.
It is a use of life-force and form by Mind.
There is a real victory of Spirit over the triplicity.
It must be a free and perfect operation of mind, life and body.
The victory is by a conscious Spirit.
We have worked out a view.
In it this is the last conquest.
This alone can make that victory possible.
We must see how this conquest can be possible.
Is this possible at all or wholly possible?
We must find out the reality of Matter.
We must do so as we seek fundamental knowledge.
Earlier we found out about Mind, Soul & Life.

*Contd....*

* * *

**ஸ்ரீ அரவிந்த சுடர்**

**உள்ளே சென்று உறைந்தால்**
**உலகம் அடங்கும்.**



*முழுமையான வெற்றியையும் சிறப்பான தீர்வையும் அவை குறிக்கின்றன.*
*உண்மையான வெற்றியே தீர்வு. நாம் அதை நாட வேண்டும்.*
*வாழ்வு ஜடத்தை வெல்வது அவ்வெற்றி.*
*சரியான பயன் அவ்வெற்றி.*
*மனம் வாழ்வின் சக்தியைப் பயன்படுத்த வேண்டும்.*
*மனம், உயிர், உடலை ஆத்மா வெல்வதே அவ்வெற்றி.*
*மனம், உடல், உயிர் சுதந்திரமாகச் சிறப்பாக வேலை செய்ய வேண்டும்.*
*விழிப்புற்ற ஆத்மா பெறும் வெற்றியது.*
*நாம் ஒரு முடிவை எடுத்துள்ளோம்.*
*அம்முடிவில் முடிவான வெற்றியிது.*
*இந்த முடிவே அந்த வெற்றியைத் தரும்.*
*இந்த வெற்றி எழும் வழியைக் காண வேண்டும்.*
*இது முடியுமா, முழுமையாக முடியுமா?*
*ஜடத்தின் உண்மையைக் கண்டறிய வேண்டும்.*
*அடிப்படை ஞானம் தேடுவது போல் தேட வேண்டும்.*
*ஆத்மா, மனம், வாழ்வை அறிந்தது போல் ஜடத்தை அறிய வேண்டும்.*

*தொடரும்.....*

* * *

**ஸ்ரீ அரவிந்த சுடர்**

**உலகம் உன் நினைவை விட்டகன்றால்,**
**உன் நினைவு உலகை விட்டகலாது.**

# கள்வனின் காவல்

*சந்திரசேகரன்*

*ஒளி இருண்டிருந்த அறையை திடாரென நிரப்பியதும் திடுக்கிட்டு நிமிர்ந்தேன். மாலை முழுவதும் வாசித்த புத்தகத்தைப் பற்றி யோசித்துக் கொண்டே உட்கார்ந்து கொண்டிருந்ததில் விளக்கேற்ற மறந்து விட்டிருந்தேன். விளக்கேற்றிய கமலா புன்னகைத்தாள்.*

*சிறு தலையணை போலிருந்த புத்தகத்தை அவளிடம் காட்டினேன். "காவல் கோட்டம்". "மாலிக்காபூர் மதுரை மீது படையெடுத்ததிலிருந்து சுதந்திரப் போராட்ட காலக்கட்டம் வரையிலான மதுரையின் வரலாறு. இதை எழுதியவர் பத்து வருடங்கள் எங்கெங்கோ அலைந்து, தகவல்களை திரட்டி எழுதியிருக்கிறார். அந்த அர்ப்பணிப்பிற்கு, உழைப்பிற்கு இவருக்கு சாகித்ய அகாடமி பரிசு தந்தது சரிதான்" என்றேன்.*

*"உங்கள் ஊரின் கதை என்பதால் உடனே ஒரு வார்த்தை விடாமல் வாசித்துவிட்டீர்களாக்கும்?" சிரித்தாள் கமலா.*

*"ஆமாம். பாண்டிச்சேரிக்கு வந்ததும், கவர்னர் துப்ளேயிடம் துபாஷியாக இருந்த ஆனந்தரங்கப் பிள்ளையின் நாட்குறிப்புகளைத் தானே முதல் காரியமாக வாசித்தேன்? நம்மூரைப் பற்றி, நாமிருக்கும் ஊரைப் பற்றி நமக்குத் தெரிய வேண்டாமா?" என்றேன்.*

*"புகழ் பெற்ற எத்தனையோ ஐரோப்பிய வரலாற்று ஆசிரியர்கள் இந்தியாவைப் பற்றி எழுதிய புத்தகங்களை வாசிக்க வேண்டியது தானே?" என்று கேட்டாள் கமலா.*

*"புகழ் பெற்றவர்கள் உண்மையைத்தான் எழுதுவார்கள் என்று நினைக்கிறாயா? கொஸாம்பி போன்ற ஒரு சிலரைத் தவிர பிறர் எழுதியவை உள்நோக்கம் கொண்ட பொய்களின் அபத்தமான தொகுப்பு.*

*வரலாற்று நூல் வெறும் அரசியல் நிகழ்வுகளை, போர்களை, ஒப்பந்தங்களைப் பற்றிய தகவல்களை மட்டும் தந்தால் போதுமா? நாடு என்பது மனிதன். அவனைப் பற்றி, அவனது வாழ்வைப் பற்றி, சமூகத்தைப் பற்றி எழுத வேண்டாமா? ஒவ்வொரு காலக்கட்டத்திலும் பெரு நிகழ்வுகள் எப்படி தனிமனித வாழ்வை பாதித்தன, தனிமனிதனின் செயல்கள் எப்படி பெரு நிகழ்வுகளை உருவாக்கின என்று சொல்ல வேண்டாமா?*

*வாழ்வு வளர்ந்த விதத்தை வரலாறு மூலம் தெரிந்து கொண்டால், இன்று நாம் சமூக முன்னேற்றத்தின் அடுத்த படிக்கட்டில் காலடி வைக்க முடியும். நல்ல புத்தகங்களை கண்டுபிடிப்பது பெரிய சவாலாக இருக்கிறது" என்றேன்.*

*"எது நல்ல புத்தகம்?" என்று கேட்டாள் கமலா.*

*"என்னைப் பொருத்தவரை, ஒரு புத்தகத்தை வாசித்து முடித்தபின், எனக்கு ஒரு நூலிழை அகமுன்னேற்றம் கிடைத்தால் அதை நல்ல புத்தகம் என்பேன்" என்றேன்.*

*"மதுரை வரலாற்றை வாசித்ததில் என்ன கிடைத்தது?" என்று கேட்டாள் கமலா.*

*"பதிவு செய்யப்பட்டிருக்கும் பல நிகழ்ச்சிகள் ஸ்ரீ அரபிந்தோவிடம் நான் பெற்ற ஆன்மீக கருத்துக்களுக்கு எடுத்துக்காட்டுகளாக இருக்கின்றன" என்றேன்.*

*"காவல் கோட்டத்திலிருக்கும் ஏதாவது ஒரு நிகழ்ச்சியைப் பற்றி சொல்லுங்களேன்" என்றாள் கமலா.*

*"கள்வனின் காதலை, அவனது காவலைப் பற்றிய ஒரு நிகழ்ச்சி. அதை ஒரு சிறுகதையாக மாற்றினேன். அதைக் கேள்" என்றேன்.*

* * *

மதுரைக்குப் பக்கமாக களவையே குலத்தொழிலாகக் கொண்ட கற்பனையூரின் மொத்த ஜனமும் ஊர் பொது இடத்தில் கூடி உல்லாசமாகவும், வேடிக்கையாகவும் பேசிக் கொண்டிருந்தது.

இரவு நெடுநேரமாகிவிட்டிருந்தது. இரவிலே வாழ்ந்து பகலிலே உறங்கும் ஊரது.

"திருமலை நாயக்க மகாராசா மருதையிலே ஏதோ விழா கொண்டாடுறாரே, நம்ம ஊர்லேயும் ஏதாவது பண்ணலாமாடா?" என்று பெரியாம்பிளை இலக்கு எதுவுமின்றி பொதுவாகக் கேட்டு வைத்தார்.

களவுக்குப் போக முடியாதபடி மிகவும் வயதாகிவிட்ட பெரிய ஆண்பிள்ளைகள்தான் பெரியாம்பிளைகள். இளவட்டப் பயல்களுக்கு களவு செய்ய பயிற்சி தருவது பெரியாம்பிளைகளின் வேலை.

"விருந்து சாப்பிட்டு கொள்ள நாளாச்சு. என்ன பண்ணலாமினு நீயே சொல்லு, பண்ணிபிடுவோம்" என்று இன்னொரு பெரியவர் சொன்னார்.

சிறிது நேரம் யோசித்த பெரியாம்பிளை, "நம்ம கழுவனுக்கு அவன் முறைப்பொண்ணு பூவாயி மேல ஆசை. அவங்கெ கலியாணத்தையே ஊர் விழாவா வச்சுருவோம்" என்றார்.

இளமையும், இயற்கையும் தந்த கொடையில் வனப்பும், வாளிப்புமாக இருந்த பூவாயி மீது ஒரு கண் வைத்திருந்த மூக்கனுக்கு எரிச்சல் மூண்டது. மெல்ல கலகத்தை ஆரம்பித்தான்.

"ஏ பெருசு, யோசிச்சுதான் பேசுறியா? கழுவன் இதுவரைக்கும் ஒரு களவுக்குக் கூட வந்ததில்ல. இவன் எப்படி ஒருத்திய வச்சு ஒழுங்கா குடும்பம் நடத்துவான்?".

மூக்கனின் நண்பன் எடுத்துக் கொடுத்தான்.

"வித்தை கத்துகிட்டேனு சொல்றான். என்ன பிரயோசனம்? எப்போ பாரு பூவாயி பின்னாலே திரியுறது மட்டுந்தேன் இவன்



காட்டுற வித்தை. ஒரு கொத்திலாவது இவன் சேர முடியுமா?".

ஒரு கொத்து என்பது நான்கு அல்லது ஐந்து கள்வர்கள் கொண்ட குழு. கொத்தாகத்தான் களவுக்குப் போவார்கள். திறமையற்றவனை கொத்தில் சேர்த்தால் அனைவருக்கும் ஆபத்து.

உற்சாகமாகிவிட்ட மூக்கன், "பொம்பிளையா பொறக்க வேண்டியவன் ஆம்பிளையாப் பொறந்துட்டான், இவனுக்கெல்லாம் எதுக்கு கலியாணம்? இவன் ஆம்பிளைனா ஒரு நல்ல களவு பண்ணிகாட்டச் சொல்லு" என்றான்.

தப்பான களவில் மாட்டிக் கொண்டு கழுவன் ஒழிந்துவிட்டால், பூவாயி மூக்கனுக்குத்தான்.

மூக்கன் சொல்வது நியாயம்தான் என்று எல்லோருக்கும் பட்டது. ஆளாளுக்கு கழுவனுக்கு புத்திமதி சொல்ல ஆரம்பித்தனர். அவன் எதையுமே சட்டை செய்யவில்லை. குமரிகள் கூட்டத்தில் வலதுபுற ஓரத்தில் உட்கார்ந்திருந்த பூவாயி மீது மட்டுமே அவன் மொத்த கவனமும் இருந்தது.

கழுவன் தனிப்பிறவி. ஊரோடு ஒத்து வாழாதவன். களவில் எல்லா வகையான பயிற்சிகளும் பெற்றிருந்தாலும் களவிற்குப் போவதே இல்லை. அவன் செய்ய விரும்பிய ஒரே களவு பூவாயியின் மனதைக் களவாடுவதுதான்.

ஒரு கிழவி கழுவனைப் பார்த்து, "ஏ ராசா, இந்த மூக்கன் இம்புட்டு பேச்சு பேசுறானே, நீ ஆடாவது களவாண்டுகிட்டு வாடா" என்றாள்.

"அது செரிதான் ஆத்தா, ஆடு களவாணிய தவிர வேற எவன் பூவாயிய கட்டுவான்? பெரிய களவு செய்றவங்கெ இவளைத் திரும்பியும் பார்க்கமாட்டாங்கெ" என்றாள் பூவாயியின் அழகில் பொறாமை கொண்ட ஒரு குமரி. அவளுக்கு மூக்கன் மீது வெகுகாலமாக ஒரு பிடிப்பு உண்டு.

வெடுக்கென்று எழுந்த பூவாயி விடுவிடுவென்று நடந்து

சென்று எவர் கண்ணிலும் படாமல் ஒரு மரத்தினடியில் அதன் வேர் மீது கோபமாக உட்கார்ந்தாள்.

அவள் பின்னோடு வந்த கழுவன் அவளருகே உட்கார்ந்தான். அவனை வெறுப்புடன் பார்த்த பூவாயி, "உனக்கு கொஞ்சமாவது ரோஷமிருக்கா? ஊரே திட்டுது, வாய திறந்து ஒரு வார்த்தை பேசுனியா?"" என்றாள்.

"அவெங்க கிடக்கிறாங்க துப்புகெட்ட பயலுக" என்றவாறே பூவாயியின் கைகளைப் பற்ற முயன்றான் கழுவன்.

அவன் கைகளை முரட்டுத்தனமாக உதறிய பூவாயி, "உன்கிட்டெ சரடு கட்டுகிட்டா ஒருவேளை கஞ்சி ஊத்த உனக்கு துப்பு இருக்கா? நீ மானங்கெட்ட ஜென்மம். என்னையும் அப்பிடி நினச்சியா? நான் வேணுமின்னால் ஊரே மெச்சுற மாதிரி ஒரு களவு பண்ணிகிட்டு வா. அதுக்கப்புறம் கைய பிடி, இடுப்பை வேணா பிடி. இப்போ எங்கிட்டாவது போயிடு" என்று கத்தினாள்.

அவள் கண்களில் தேங்கியிருந்த கண்ணீரை சிறிது நேரம் பார்த்துக் கொண்டிருந்த கழுவன் பெருமூச்சுவிட்டபடி எழுந்து மதுரையை நோக்கி ஒரு முடிவோடு அங்கிட்டு, இங்கிட்டு பராக்கு பார்க்காமல் வேகமாக நடக்க ஆரம்பித்தான். போகும் வழியில் தன் குடிசையிலிருந்து ஒரு சிறு மூட்டையை எடுத்துக் கொண்டான்.

நள்ளிரவு கடந்து நெடுநேரமாகிவிட்ட சமயத்தில், இருளின் பாதுகாப்பில் சத்தமின்றி குதிகாலால் நடந்து மதுரையின் தெற்குக் கோட்டை அரண்மனையின் நெடிதுயர்ந்த சுவரொன்றை நெருங்கிய கழுவன், அகழிக்கருகே ஆளரவமற்ற பகுதியிலிருந்த ஒரு மரத்தினடியில் உட்கார்ந்து கொண்டு சுற்றுப்புறத்தை நோட்டமிட்டான்.

அந்தப்புரம் இருந்த அரண்மனையின் தென்புறத்தில் காவல் மிகமிக அதிகம். ஆனாலும் அங்கு சில பகுதிகள் மட்டும் குறைவான காவலோடு நிசப்தமாக இருந்ததை கவனித்த கழுவன் அவை அனேகமாக அரசரும், அரசியரும் தூங்கும் பகுதியாக இருக்க



வேண்டும், அதுவே களவாட சரியான இடம் என்ற முடிவிற்கு வந்தான்.

அந்தப்புரத்தில் அல்லது அரண்மனையில் களவாட எவனும் இதுவரையிலும் துணிந்ததில்லை. அகப்பட்டுக் கொண்டால், தண்டனை பல ஜன்மங்களுக்கும் மறக்க முடியாத வலியுடன் கூடியதாக இருக்கும். கண்கள் பறிக்கப்பட்டு, மாறுகை, மாறுகால் வாங்கப்பட்டு, ஏழு நாட்கள் மொன்னையான கழுவில் உட்கார்ந்து துடிதுடித்து உயிரை விட வேண்டியதாகிவிடும். பூவாயிக்காக எத்தனை நாட்கள் வேண்டுமானாலும் கழுவில் உட்காரலாம்.

இரவும், இருளும் கள்வனின் தோழர்கள். பகலும் ஒளியும் அவனது பகைவர்கள். சூழல் சரியாக இருந்தால் களவு சுலபம். சூழல் சரியாகத்தான் இருந்தது. கழுவன் ஏதோ ஒரு திரவத்தை உடலெங்கும் பூசிக் கொண்டான். இனி அவனை முதலை ஒன்றும் செய்யாது. சத்தமின்றி அகழியில் இறங்கி நீந்தினான். தாமரைக் கொடிகள் காலைச் சுற்றாமல் கவனமாக நீந்தினான்.

மறுகரை ஏறியதும் கழுவன் தன் தோளிலிருந்த மூட்டையை அவிழ்த்தான். அதிலிருந்து ஒரு உடும்பையும், நீண்ட கயிறையும் எடுத்தான். உடும்பைச் சுற்றிக் கயிற்றை இறுகக் கட்டிய கழுவன் அதை தன் தலைக்கு மேல் மெல்ல இருமுறைச் சுற்றிவிட்டு, பின் வெகு வேகமாக சுவர் உச்சியை நோக்கி எறிந்தான். உடும்பு சுவரை இறுகப் பற்றிக் கொண்டது. இனி கயிற்றில் பெரிய பாறாங்கல்லையே கட்டித் தொங்கவிட்டாலும் கயிறுதான் அறுந்துபோகுமே தவிர உடும்பு விழாது.

சுவற்றின் மேல் கால்களை ஊன்றி கயிற்றில் விறுவிறுவென விரைவாக ஏறிய கழுவன் சுவரின் உச்சியை அடைந்ததும், அதன் மேற்பரப்பில் ஊர்ந்து ஒரு மண்டபத்தின் மீது வசதியாக உட்கார்ந்து கொண்டான்.

மடியிலிருந்த கன்னக்கோலை எடுத்து விதானத்தின் கூரையை

கீற ஆரம்பித்தான். எறும்பு மட்டுமே புகக்கூடிய கீறல். மனிதனின் கண் பார்வைக்குத் தெரியாத அளவிற்கு மெலிதான கீறல்கோடுகளால் சிறிய சதுரம் போட்டான். பகலில் கூட பார்வைக்குப் புலப்படாத கோடுகள். பின் அச்சதுரக்கல்லை நெம்பி எடுத்து அப்படியே உருவி கூரை மேல் வைத்தான். கன்னவாசல் திறந்துவிட்டது. ஒரு குச்சியின் நுனியில் துணியைச் சுற்றி, அதை மொண்டிக் கொம்பாக கன்னவாசலின் வழியே செலுத்திவிட்டு, ஏதேனும் ஆளரவம் உண்டா என்று கவனித்தான். சிற்றெறும்புகள் நகரும் பேரோசையைத் தவிர வேறெந்த சப்தமும் இல்லை.

உடலைக் குறுக்கி கன்னவாசலில் நுழைந்து ஒரு கயிற்றின் உதவியோடு அரண்மனைக்குள்ளே கீழே இறங்கினான். அருகிலிருந்த பெரிய அறை கண்ணில் பட்டது. சத்தமின்றி சுவரோடு பல்லி போல் ஊர்ந்து அறைக்குள் சென்றான். அவனுள் சேகரமாகியிருந்த பல தலைமுறை மூதாதையரின் அனுபவசாரத்தினால் உண்டாகியிருந்த உள்ளுணர்வு அவனைக் கைவிடவில்லை. அது ராணியின் அந்தரங்க படுக்கை அறைதான்.

பட்டத்து ராணி அசந்து தூங்கிக் கொண்டிருந்தாள். அவள் தூக்கம் கெடக் கூடாது என்பதால் திருநங்கை வீரர்கள் தூரமாக காவலிருந்தது கழுவனுக்கு வசதியாக இருந்தது.

ராணி தன் நகைகளைக் கழட்டி ஒரு பெரிய தாம்பாளத்தில் வைத்திருந்தாள். விலை மதிப்பற்ற வைரங்கள் பதித்த அந்த நகைகள் இருளிலும் மின்னின. அவற்றைத் தொடாமல் திருமலை நாயக்கரின் முத்திரை மோதிரத்தை மட்டும் எடுத்து மடியில் கட்டிக் கொண்ட கழுவன் வந்த வழியே தடையின்றி, சத்தமின்றி திரும்பினான்.

களவு என்றால் இதுதான்டா களவு - ராஜகளவு. அடையாள ராஜ களவில் களவாடப்படும் பொருளின் அளவும், விலைமதிப்பும் முக்கியமல்ல. பெருங்காதலைப் போல களவிலும் சவால்தான் முக்கியம். சவால் இல்லாத காதலும், களவும் உயிர்த்துடிப்பில்லாதவை.



மறுநாள் ஊரே விக்கித்து போய் ஆலமரத்தடியில் உட்கார்ந்திருந்தது. இந்திரஜாலம், மந்திரஜாலம் போல ஊரிலிருந்த ஒவ்வொரு ஆணும் களவு செய்திருக்கிறார்கள். ஆனால் எந்த தலைமுறையிலும் எவரும் ராஜகளவு செய்ததில்லை. செய்ய நினைத்ததுமில்லை.

நானூறு துருக்க வீரர்கள், இருநூறு திருநங்கை வீரர்கள், நூறு குதிரை வீரர்கள், பல நூறு சேடிப்பெண்கள் பாதுகாத்த அந்தப்புரம் இத்தனைக் கட்டுக்காவல்களை மீறி, தன்னந்தனியாகச் சென்று இந்த மாயத்தை செய்துவிட்டு வந்து தலையைக் குனிந்து கொண்டு உட்கார்ந்திருந்த கழுவனை எல்லா கண்களும் வியப்புடன் பார்த்துக் கொண்டிருந்தன. மூக்கன் கூட அதிர்ந்து போயிருந்தான்.

“டே, ராசா வீட்டு சங்கதியெல்லாம் பேசாதீங்கடா” என்று அனுபவசாலியான ஊர் பெரியாம்பிளை எச்சரித்துக் கொண்டிருக்கும்போதே அங்கே பின்னதேவன் தலைமையில் கோட்டைத் தலைவனோடு இருபது குதிரை வீரர்கள் வந்தனர்.

கள்வர் நாட்டுத் தலைவனான பின்னதேவனை பார்த்த ஊர் பெரியாம்பிளை, “ஐயா” என்று அவர் அருகே சென்று நின்றார்.

“அடேய், நேத்து இரவு ராணிகிட்டேயிருந்து முத்திரை மோதிரம் களவு போயிடுச்சி. இதை இந்த ஊர்க்காரங்களைத் தவிர வேறு யாரும் செய்திருக்க முடியாது. வேற எவனுக்கும் அந்த அளவு திறமையோ, விவரமோ, தைரியமோ கிடையாது’’ என்றார் பின்னதேவன்.

ஊரே மௌனமாக இருந்தது. தன் குடிகளின் போக்கைப் புரிந்து வைத்திருந்த பின்னதேவன், “டேய், ராஜா சொன்ன சேதியைக் கேளுங்கடா. அவருக்கு அரண்மனை வீரங்க மேலதான் கோவம். களவாடினவன் காவலிலே இருக்கிற குறையத்தான் காட்டிக் கொடுத்திருக்கான். அப்பேர்ப்பட்ட சூராதிசூரனைப் பார்க்கணும். முகத்தைக் காட்டி முத்திரை மோதிரத்தைக் கொடுத்திட்டாப்

போதுமின்னு சொல்லி அனுப்பினார். பொழுது சாயறதுக்குள்ள மோதிரம் வரலையானால், நேத்து காவலுக்கிருந்த நானூறு பேரையும் வெட்டிப் போட சொல்லிவிட்டார். கொஞ்சம் தயவு பண்ணுங்கடா" என்றார்.

சிறிது நேரம் பின்னதேவனையே பார்த்த ஊர் பெரியாம்பிளை, "ஐயா, உங்க சொந்த சாதிக்காரனையே காட்டிக்கொடுத்தா, உங்களுக்கு எத்தனை பொன்னு தரேன்னு ராசா சொன்னாரு?" என்று கேட்டார்.

முகம் சுருங்கிப்போன பின்னதேவன், "சந்தேகப்படாதீங்கப்பா. நாம ஒப்படைக்கிற ஆளுக்கு ஏதாவது ஆகிப்போனா நம்ம ஊர் கோவிலுக்கு என்னை பலி கொடுங்கப்பா" என்றார்.

"முடியாது தேவரே. எது நடந்தாலும் யாரையும் காட்டிக் கொடுக்கமாட்டோம். களவு கொடுத்தது ராசாவோட தப்பு. அவரை அபராதம் கட்டிபோட்டு மோதிரத்தை வாங்கிகிட்டுப் போகச் சொல்லுங்க" ஊர் பெரியாம்பிளை தீர்மானமான குரலில் சொன்னார்.

"உயிரோடு எரிச்சாலும், தலைகீழே தொங்கப் போட்டு தோலை உரிச்சாலும் உங்க ஆளை நீங்க காட்டிக் கொடுக்கமாட்டீங்க?" என்று கோபப்பட்டான் கோட்டைத் தலைவன்.

"அதான் தெரியுதில்லே? அப்புறம் எதுக்கு இங்க வரணும்?" என்று ஒரு இளவட்டம் எதிர்குரல் கொடுத்தான்.

பின்னதேவன், "இப்ப நம்ம ஆளை ஒப்படைக்கலைனா ராஜா மொத்த ஊரையும் கொளுத்திப் போடுவார்" என்றார்.

"நாந்தேன் எடுத்தேன். இதோ இருக்கு மோதிரம். ராசாகிட்டே நான் வரேன்" திடாரென கழுவன் பேசினான்.

"சந்தோஷமப்பா. உன்னைய பத்திரமா திரும்ப ஊருக்கு கொண்டுவந்து சேர்க்கிறது என் பொறுப்பு" என்ற பின்னதேவன், "கிளம்புங்கப்பா" என்று வீரர்களைப் பார்த்து குரல் கொடுத்தார்.



கழுவனை நடுவே நடக்கவிட்டு அவனைச் சுற்றி வளைத்தவண்ணம் குதிரை வீரர்கள் நகர்ந்தனர்.

"யப்போய், அர்ச்சுனனுக்கு வில்லு, களவாணிக்கு சொல்லு. நாமெல்லாம் களவாணிங்க. சொன்ன சொல்லு மாறமாட்டோம். இவனுங்க அரண்மனைக்காரங்க. எதுலேயும் நம்ப முடியாது, நம்பவும் கூடாது. கழுவனைத் தனியா அனுப்பக் கூடாது டோய்" என்று மூக்கன் உரத்த குரலில் சொன்னான்.

அனைவரும் அதை ஏற்றுக் கொள்ள, ஊரே திரண்டு கழுவனை அழைத்துச் சென்ற வீரர்கள் பின்னே சென்றது.

குதிரைகளின் பின்னால் நடந்து சென்று கொண்டிருந்த இளவட்டங்களையும், பெரியாம்பிளைகளையும் விலக்கிக் கொண்டு கூட்டத்தின் முன்னால் வந்த பூவாயி, குதிரைகளின் இடையில் புகுந்து கழுவனின் அருகே சென்றாள்.

"ஆரு புள்ளே அது?" குதிரை மீதிருந்த வீரன் அதட்டலாகக் கேட்டான்.

"நானா? கழுவன்கிட்ட சரடு கட்டிக்க போறவ. என்னையத் தவிர வேறெவ அவம்பக்கத்திலேயே நடப்பா?" என்று கேட்டுவிட்டு கழுவனோடு நடக்கத் தொடங்கினாள்.

"நம்ம ராசா பாக்க நல்லா இருக்கிறவங்களைத்தான் கட்டிப்பாரமில்லே? நீ நேத்து பாத்த ராணி எப்படி இருந்தாங்க?" பூவாயி தாழ்ந்த குரலில் கழுவனிடம் கேட்டாள்.

ஏதோ யோசித்தபடி தலைகுனிந்து நடந்து கொண்டிருந்த கழுவன் பூவாயி பேசியதை கேட்டு திடுக்கிட்டு திரும்பிப் பார்த்தான்.

"நானாவது ராணியைப் பார்க்கிறதாவது? களவுக்கு போகும்போது பொம்பளை நினைப்பும், பேராசையும் வச்சுக்கக் கூடாது" என்றான் கழுவன்.

சந்தோஷமாகிவிட்ட பூவாயி கழுவனை உரசிக் கொண்டே

நடந்தாள். உரசல் யதேச்சையாக நிகழ்ந்ததா, அல்லது வேண்டுமென்றே செய்யப்பட்டதா என்பது பூவாயிக்கு மட்டுமே தெரியும்.

கழுவன் அவளைப் பார்த்து சிரித்தான், அவளும் அவனைப் பார்த்து சிரித்தாள். பூவாயி மகுடம் சூட்டிவிட்டாள். கழுவனுக்கு இதுபோதும். இனி தலை போனாலும் கவலையில்லை.

அண்ணாந்து பார்த்தால் கழுத்தே சுளுக்கிக் கொள்ளுமளவிற்கு உயரமான யானைகளின் கால்களைப் போன்ற தூண்களைக் கொண்ட மண்டபத்தில் வீரர்களின் பாதுகாப்போடு, சிறு கன்னவாசல் வழியே நுழையக்கூடிய உடல்வாகைப் பெற்ற கழுவன், மதுரை திருமலை நாயக்கர் மன்னர் முன்னால் நிறுத்தப்பட்டான்.

முத்திரை மோதிரமும் அதைக் களவாடியவனும் கைப்பற்றப்பட்டுவிட்டதால் மன்னருக்கு கோபம் மறைந்துவிட்டது.

சிறிய உடும்பைப் போலிருந்த அவனைப் பார்த்த அவருக்கு சிரிப்பாகவும், அவன் திறமையைப் பார்த்து ஆச்சரியமாகவும் இருந்தது.

அப்போது சேடி ஒருத்தி தங்கத் தாம்பாளத்தில் பொற்கிண்ணங்களில் பழரசம் கொண்டு வந்து மன்னர் அருகில் நின்றாள். ஒரு கிண்ணத்தை எடுத்துக் கொண்ட மன்னர் பழரசத்தைப் பருகினார். அமைச்சர்களும் கிண்ணங்களை எடுத்து பழரசத்தைப் பருகினர்.

அரசர் கழுவனுக்கும் ஒரு கிண்ணத்தை தரச் சொன்னார். கள்வனுக்குப் பழரசமா? அமைச்சர்களுக்குப் பிடிக்கவில்லை என்றாலும், மன்னரை மீறி அவர்களால் என்ன செய்ய முடியும்?

கழுவன் கிண்ணத்தை எடுக்கும்போதோ, குடிக்கும்போதோ, திரும்ப கிண்ணத்தை தாம்பாளத்தில் வைக்கும்போதோ சிறு ஓசை கூட வரவில்லை என்பதை மன்னர் வியப்புடன் கவனித்தார்.



அவன் களவாடிய விதத்தை விவரிக்கச் சொன்னார்.

சிறு ஓசை கூட இல்லாமல் காற்றில் மிதப்பது போல குதிகாலில் வேகமாக நடப்பதையும், ஒரே வீச்சில் அவனது உடும்பு கோட்டைச் சுவரைப் பற்றிக் கொண்டதையும், எறும்பு புகுமளவிற்கு மட்டுமே மெலிதாக அவன் கன்னக்கோல் கோட்டைச் சுவரைக் கீறியதையும், சிறிய கன்ன வாசலில் அவன் உடல் நுழைவதையும், எந்தத் தடயமுமின்றி அவன் மீண்டும் வந்த வழியே திரும்பியதையும் பார்க்கப் பார்க்க மன்னருக்கு ஆச்சரியம் தாங்க முடியவில்லை.

மன்னர் தன் தீர்ப்பை கூறினார். "முத்திரை மோதிரத்தை களவாடுபவனுக்கு நரகத்தைவிட மோசமான சித்ரவதை சாவுதான் தண்டனை. ஆனால் கழுவன் வெறும் கள்வனல்ல. பெரிய கலைஞன். அதனால் அவனுக்கு அடையாளத் தண்டனையாக மூன்று சவுக்கடிகள் மட்டும் தரப்படும்.

அதற்குப் பின்னர் மதுரையின் ஊர்க்காவல் தலைமை அவனுக்குத் தரப்படும். அவன் ஊர்க்காரர்கள் ஒவ்வொரு வீட்டிலும் காவல் கூலி வாங்கிக் கொண்டு களவு, திருடு போகாமல் காவல் செய்து வர வேண்டும்.

கழுவனைக் கொண்டு வந்த பின்னதேவனுக்குப் பரிசாக இரண்டு கிராமங்கள் தரப்படும். இது அரசாணை" என்றார்.

அமைச்சர் கழுவனைப் பார்த்து, "டேய், உனக்கு ஏதாவது சொல்ல வேண்டி இருக்காடா?" என்று கேட்டார்.

"ஐயா, நான் இறங்கிய கன்னவாசலை மூடாமல் அதை அப்படியே விட்டுவிடணும்" என்றான் கழுவன்.

திடுக்கிட்டுப் போன அமைச்சர், "ஏண்டா, அது வழியா வேற ஊர் களவாணிங்க உள்ளே நுழைஞ்சால் என்னடா பண்றது?" என்று கேட்டார்.

"எங்க காவலில் அது நடக்காதுங்க" என்று தன்னம்பிக்கையோடு சொன்னான் கழுவன்.

மன்னர் சிரித்தார்.

கள்வனின் கோரிக்கை ஏற்கப்பட்டது. அந்த கன்னவாசல் அதன்பின் மூடப்படவில்லை. அதன் வழியே எவரும் நுழையவுமில்லை, நுழைய முடியவுமில்லை.

கழுவன் சந்தோஷமாக சவுக்கடியைப் பெற்றுக் கொண்டான்.

அதன்பின் மதுரை ஊர்க்காவலை, கோட்டைக் காவலை அல்ல, ஏற்றுக் கொண்டான்.

கற்பனையூர் கள்வர்கள் மதுரையின் ஊர்க்காவலர்கள் ஆயினர்.

150 வருடங்கள் கழித்து மதுரையில் பிரிட்டிஷ் ஆட்சி உருவானபோது, ஆங்கிலேய கவர்னர் வி.ஹச்.லெவின்ச் பல தலைமுறைகளாக தொடர்ந்திருந்த காவல் முறையை தடுத்து உத்தரவு பிறப்பித்தார்.

அடுத்த வாரமே, கவர்னர் பங்களாவில் ஆங்கிலேய சிப்பாய்களின் கட்டுக்காவலை மீறி, லெவின்ச் நல்ல முறையிலும், தகாத முறையிலும் சேகரித்து வைத்திருந்த அனைத்துப் பொக்கிஷங்களும் கள்வர்களால் களவாடப்பட்டன. பதறிப்போன கவர்னர் தன் உத்தரவை ரத்து செய்து, மீண்டும் ஊர் குடிக்காவல் முறையை அனுமதித்தார்.

அதன்பின் மாட்சிமை பொருந்திய பிரிட்டிஷ் மகாராணியின் அரசாங்கம் மதுரையில் போலீஸ் துறையை அறிமுகப்படுத்தும் வரை, கள்வர்களே மதுரையைக் காவல் காத்தனர். சுமார் 250 வருடங்கள் கள்வர்களின் காவலில் மதுரை நிம்மதியாக கண் உறங்கியது.

* * *

கவனமாக கதையைக் கேட்ட கமலா, "களவுள்ள வரை காவல் தேவை. காவலிருந்தால் அங்கு களவிற்கு வாய்ப்புண்டு. திசைகள் வேறானாலும் அடிப்படையில் காவலும், களவும் ஒன்றே" என்றாள்.



"ஒரு தவறான செயல் முழுமையான செம்மை அடைந்தால், நேரெதிரானதாக மாறும்.

கள்வனின் முழுமையான களவு திறமை பாராட்டப்பட்டு அவனுக்கு காவல் வேலை தரப்பட்டது.

பரம்பரை களவு குணத்தை மனஉறுதி கொண்டவனால் மாற்ற முடியும். தனி மனிதன் மாற முயன்றால் சமூகம் எதிர்க்கும். முன்னோடியை சமூகம் ஏற்றால், அனைவருக்கும் நன்மை உண்டு. சுயார்ப்பணம் செய்யும் மனிதன் ஊருக்குத் தலைவனாவான்" என்றேன்.

"ஊருக்காக செயல்படாத மனிதன் காதலுக்காக செயல்படுவான். உயிரைப் பொருட்படுத்தாத சாகசத்தை காதல் செய்ய வைக்கும்" என்றாள் கமலா.

"பெண்ணுக்குப் பொருளும், பாதுகாப்பும் முக்கியம். ஆணுக்கு பெண்ணும், அவள் பாராட்டும் முக்கியம்" என்றேன்.

"சரி, சரி. உங்களை மனமாரப் பாராட்டுகிறேன்" என்று கூறி சிரித்தாள் கமலா.

முற்றும்.

* * *

**ஸ்ரீ அரவிந்த சுடர்**

**அகம் அழைப்பது புறம் சாதிப்பது.**

**ஸ்ரீ அரவிந்த சுடர்**

**எளிய கருத்தே எட்டாத சிகரத்தைத் தொடும்.**

## இம்மாதச் செய்தி

# சமர்ப்பணம்

# சிருஷ்டியைப்

# பரிணாமமாக்கும்.





P.146 And put aside in her subconscient cave

**பாதாள குகையில் பத்திரமாய் வைக்கப் பெற்று**

- ✡ ஒளிமயமான சக்தியில் அவள் மங்கிய ஜீவனாய் வளர வேண்டும்
- ✡ முடிவாக மூலவனையடைய அவள் முயல வேண்டும்
- ✡ உலகைச் சுற்றிப் பார்த்து நிமிர்ந்து கடவுளை நாட வேண்டும்
- ✡ தோல்வி பாடம் தரும், தோல்வி தரும் முன்னேற்றம் பெரியது
- ✡ விதியோடும் சூழ்ந்துள்ள உலகோடும் போடும் போராட்டம்
- ✡ ஆழ்ந்து புதைந்த ஆத்மாவை வேதனையால் கண்டு
- ✡ பரந்த அவள் வாழ்வில் பெற்ற பலன் பெரியது
- ✡ பாதி வழியில் நின்று, இழந்த நம்பிக்கையை நினைத்து
- ✡ ஆரம்பம் தவிர அனைத்தும் பாக்கி
- ✡ அவள் சக்தியின் சூழல் முடிவதாகத் தெரிவித்தது
- ✡ நம் அறியாமையின் பொறிகளை மட்டுமே அவள் தொட்டாள்
- ✡ மனம் சிந்திக்கவில்லை, வாழ்வே யோசனை செய்தது
- ✡ புலனே உணர்ந்தது; ஆத்மா அணைத்துணரவில்லை
- ✡ வாழ்வின் தழல் லேசாக நெருப்புப் பற்றியது
- ✡ உணர்வின் தாண்டவம், சந்தோஷமாக எழுந்தது

✡ அரைத்தூக்க மயக்க சக்தியின் உந்தும் வேகம் தவிர வேறில்லை
✡ வாழ்வின் நுரையில் உழலும் ஆத்மா மூழ்கிற்று
✡ எழும் பொருள்களை எட்டிப் பிடிக்கும்
✡ அனைத்துப் பின்னும் பெறும் பாத்திரங்கள் நகர்ந்தன
✡ இறைவனின் திராட்சை இரஸமாக வழிந்தது
✡ சத்தின் பேரானந்தம் புவி மண்ணில் சிதறிப் பரவியது
✡ மயங்கிய மனத்தையும் ஆத்மாவையும் போதைக்குள்ளாக்கியது
✡ இருண்ட கரடுமுரடான பூரிப்பின் பழரசம்
✡ மங்கியது, ஆத்மரூபத்தை இன்னும் அடையவில்லை
✡ உலகின் குருட்டு மூலத்தில் வதியும் கலங்கிய மனிதன்
✡ இனி பிறக்கப் போகும் தெய்வ நீதி, ஊமை உணர்வின் ஆசை

✡ மூன்றாம் சிருஷ்டி முகதரிசனம் தந்தது
✡ உடலின் ஆரம்ப அச்சின் மனம்
✡ பளிங்கொளி மின்னும் இருண்ட லோக சக்தி
✡ எண்ணத்தைச் சீதனமாக ஏற்ற பரபரப்பான லோகம்
✡ எண்ணத்திறனை செயலின் ஆயுதமாக்கி
✡ காலம் செப்பனிடும் கற்சிலையைக் காணும் குறுகிய எண்ணம்
✡ சிரமமான பரிணாமம் கீழிருந்து எழுந்தது
✡ மேலிருந்து உதவியை மூடியிட்டு அழைத்தது

* * *



# யோக வாழ்க்கை விளக்கம் VI

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

*கர்மயோகி*

II/78) **பெண்ணின் கவர்ச்சி அவள் பருவத்துடன் அழிகிறது. அகத்தில் பெண்ணின் கவர்ச்சி சாகும்வரை அழிவதில்லை. உடலாலான வாழ்வை மனிதன் போற்றுவதால் பெண்மை அவனைக் கவருகிறது.**

- **உடலின் கவர்ச்சி அழிந்த பின்னும் உணர்வின் கவர்ச்சி போவதில்லை.**

- *ஆணும் பெண்ணும் வேறுபட்ட இரு விஷயமில்லை.*
- *ஒன்று இரண்டாகப் பிரிந்த முழுமையின் பகுதிகள்.*
- *பிரிந்தவை சேர கவர்ச்சி எழுகிறது.*
- *வேலை கிடைப்பதால் அனைவரும் படிப்பை நாடுகின்றனர்.*
- *வேலை கிடைத்தபின் படிப்பை நாடுபவர் அரிபொருள்.*
- *ஆத்மா அளவில் ஆணும் பெண்ணும் பிரிக்க முடியாதவர்.*
- *ஆத்மாவுக்குக் கண்ணில்லாததால், கண்ணில் படுவது கவருகிறது.*
- *இரு விழிப்புள்ள ஆத்மாக்கள் ஒருவர் மற்றொருவருக்குரியவர் எனக் கண்டு கொண்டால் அது முதற்பார்வையிலே எழும். அவர்களைப் பிரிக்க முடியாது.*
- *பெண்ணை அகத்தின் கவர்ச்சிக்காக நாடுவது, படிப்பை வேலைக்காக அல்லாமல் படிப்புக்காக நாடுவது போலாகும்.*
- *உலகில் அனைவரும் எந்த வயதிலும் தேடுவது அன்பு.*
- *பெற்றோர் அன்பு உடலுக்குரியது.*
- *நண்பரிடம் உணரும் அன்பு உயிருக்குரியது.*
- *மற்றவருடன் காணும் அன்பு சமூகத்தில் பழக்கத்திற்குரியது.*

- *குருவிடம் காட்டும் அன்பும் ஆன்மாவுக்குரியது.*
- *மனிதன் தேடுவது நிறைவான அன்பு.*
- *உடலும், உயிரும், இதயமும், மனமும், ஆன்மாவும் நிறைந்த அன்பை மனிதன் நாடுகிறான்.*
- *உறவு உடலில் மனைவியிடம்தான் பூர்த்தியாகும்.*
- *எல்லா அன்பும் உள்ள கணவன், மனைவி உணர்வது காதல்.*
- *வள்ளுவர் எழுதியதற்குக் காமத்துப்பால் எனப் பெயரிட்டார்.*
- *காமத்தின் அடிப்படையில் ஏற்பட்டது காதல் என்பதால் அவர் அடிப்படையைக் குறிப்பிட்டார்.*
- *காமத்தை வென்ற காதல், காமத்தைக் காதலாக மாற்றும் எனில் அது பூரணமுடையது.*
- *நாம் வெளிநாட்டுக்குப் போனால், வேறொருவர் வீட்டிற்குப் போனால், முதல் வரவேற்பு அவர்கள் நாகரீகத்தைக் காட்டுகிறது.*
- *எப்படிப்பட்டவர் வீட்டிற்கு வந்தாலும் நான் வாயைத் திறந்து வாங்க என்று அழைக்கமாட்டேன் என்று பெருமைப்படும் மக்கள் அநாகரீகமானவர்.*
- *எவரையும் முழு மரியாதையுடனும், அன்புடனும் வரவேற்பேன் என்பவர் பண்புள்ளவர்.*
- *உறவு புனிதமானது.*
- *சாப்பாடு, வீடு, துணி, ஆகியவை முக்கியம் என்றாலும், அவற்றிலும் உறவைக் காண்பவரே உறவுக்குரியவர்.*
- *டேனிஷ் எம்பஸியில் ஒரு விருந்து. நேரு வந்திருக்கிறார். அவருக்காக அனைவரும் காத்திருந்தனர். அவர் ஒரு சிறு பெண்ணை நோக்கி பின்னால் மறைத்து வைத்திருந்த ரோஜாவைக் கொடுத்துப் பிறந்த நாள் வாழ்த்துக் கூறினார். எப்போ, எங்கோ அவர் பார்த்த சிறு குழந்தையின் முக வசீகரத்தால் அவர் அவள் பிறந்த நாளை அறிந்து வாழ்த்திக் கொண்டாடினார். அது உறவை உணர்ச்சி வசப்படுத்தும்.*



- *குடும்பம் என்பது கோயில். உறவு என்பது உயிருள்ள உணர்வு.*
- *மனிதன் மனத்தால் வாழ வேண்டும்.*
- *உடலால் வாழ்வதை விட உயிரால் வாழ்வது மேல்.*
- *ஆத்மா உயிரில் வெளிப்பட்டு வாழும் வாழ்வை பகவான் தெய்வீக வாழ்வு என்கிறார்.*

* * *

**II/79) உடலின் கவர்ச்சி சாகும்வரை தொடர்கிறது. புருஷனும் ஈஸ்வரனும் அதற்கு விலக்கல்ல.**

**உடலின் கவர்ச்சி ரூபத்தின் கவர்ச்சி.**

- *சிருஷ்டி என்பது சத்தியம் சக்தியாகி ரூபம் பெறுவது.*
- *ரூபம் சிறந்து மிளிர்ந்தால் சிருஷ்டி முடிகிறது.*
- *ரூபம் சக்தியை வெளிப்படுத்துவது.*
- *ரூபத்தால் எல்லா சக்தியையும் வெளிப்படுத்த முடியாது.*
- *ரூபம் முறையாக நெகிழ்ந்து சக்தி கொஞ்சம் கொஞ்சமாக அதனுள் வெளிப்படும்.*
- *அம்முறையும் நெகிழ்ச்சியும் வாழ்வாகும்.*
- *சிருஷ்டி பிரம்மத்தின் இச்சையால் எழுவது* (self-conception).
- *ரூபம் பிரம்மம் தன்னை வரையறை செய்வதால் எழுவது* (self-limitation).
- *முழு சக்தியும் ரூபத்துள் கிரகிக்கப்படுவதால் சிருஷ்டி நிறைகிறது* (self-absorption).
- *இம்மூன்று நிலைகளும் பிரம்மம், புருஷன், ஈஸ்வரனுக்குரியவை.*
- *புருஷன் இடைப்பட்டவன், பிரம்மம் ஆரம்பம், ஈஸ்வரன் முடிவானவன்.*

- முடிவானவனுக்கு முழுமையான கவர்ச்சியுண்டு.
- இளமையில் வாலிபமும், அழகும் கவர்கின்றன.
- நாளானபின் குணமும், பிரியமும் கவர்கின்றன.
- முடிவாகக் கவர்வது ஆத்மா. அதன் கவர்ச்சி ஐக்கியத்தில் முடிகிறது.
- அன்பான தம்பதிகள் ஆர்வமாக வாழ்ந்து நெருங்கினால் அவர்களால் பிரிவு பொறுக்காது.
- வாசகர்கள் கதை படிக்கும்பொழுது கதையின் போக்கை ஆர்வமாகக் கருதுவார்கள். அது (plot) என்ன முடிவு என்பது.
- கல்லூரி ஆசிரியர் அதே நூலை வகுப்பில் நடத்த பாத்திரங்களைக் கூர்ந்து கவனிப்பார்.
- கதாசிரியர் கதையில் வெளிப்படுத்துவதில் வாசகர்கள் பத்திலொரு பங்கும் பாடம் நடத்துபவர் நாலில் ஒரு பங்கும் பெறுவார்கள்.
- கதையில் ஒரு பக்கம் அங்குள்ள மேசை, நாற்காலிகளையும், இருப்பவர் உடைகளையும், உள்ளே வருபவர் முகக் குறியையும் வர்ணித்தால், அதை மனம் பெற எழுதுபவர் ஏழாயிரம் முறை அவற்றை அதன் முன் மனத்துள் கொண்டு வந்திருப்பார். தான் அதுபோல் கண்டவை கருத்தில் நிலைக்கக் கருத்தையும் காட்சியையும் இணைக்க முயல்வார். எழுத்தாளர்கள் தவிர மற்றவர்கள் கண்ணில் அது படாது. பட்டாலும் அர்த்தப்படாது. அர்த்தப்பட்டால் இணைக்க முயலலாம். அது ஒரு ஜென்ம புண்ணியம். பொருள்களை விட உடையை அறிய முடியாது. உடுத்துபவன் மனநிலை உடையில் தெரியும். அதை அறிய அவனை அறிய வேண்டும். முகக்குறி முடிவான நிலை. படிப்பவர் அந்த ஒரு பக்கத்தை ஒன்று அல்லது இரண்டு நிமிஷத்தில் கடந்துவிடுவார். எழுத ஒன்று அல்லது இரண்டாண்டு அனுபவம் அறிவாக மாற வேண்டும். பல ஆண்டுகளில் ஒரு ஆசிரியர் கண்ட முடிவை எழுத்தில் ஓரிரு



வாக்கியங்கள் குறிக்கும். பிறர் மனம் பரவசமடைவது எப்படி என்று அறிய, அதுவும் ஓர் குறிப்பிட்ட விஷயத்தில் அறிய -- உ.ம். பெண்கள் பொருளைப் பாராட்டுவது போல் பணத்தைக் கருதமாட்டார்கள். 1000 ரூபாய் பணத்தை விட 500 ரூபாய் புடவை முகத்தை மலரச் செய்யும் - ஒருவர் 10 அல்லது 20 ஆண்டு அனுபவம் பெறுகிறார். இந்த மாதிரி அனுபவம் பெற முடியாத ஆசிரியர்கள் அதிகம். நாளைக்கு வரும் பலாக்காயை விட இன்று கிடைக்கும் களாக்காய் மேல் என நாம் சிறு வயது முதல் கேள்விப்பட்டாலும் அது அனுபவத்தில் உண்மையென அறிய நாளாகும். ஒரு கதையைப் படிக்கும் அடுத்த கதாசிரியர் 100க்கு 80 பங்கு அனுபவிப்பார். எழுதியவர் மட்டுமே அதை முழுவதும் அனுபவிக்க முடியும். ஷேக்ஸ்பியரின் பெருமையை இங்கிலாந்து 200 ஆண்டுகளாக அறியவில்லை. அறிய நேரிட்டபொழுது பிரான்ஸிடமிருந்து அறிந்தனர்.

- வில்லியம் தாக்கரே பிரபல ஆங்கில ஆசிரியர்.

  அலெக்ஸாண்டர் டூமாஸ் எழுதிய கொவுண்ட் ஆஃப் மாண்டி கிரிஸ்டோ நாவலை காலை 6 மணிக்குப் படிக்க ஆரம்பித்தவர் இரவு 11 மணி வரை படித்து முடித்தார்.
- அவரால் எழுதியவரின் உள்ளத்தை அதிகமாக அறிய முடியும்.
- திருமணம் உயர்ந்த மனிதனுக்குரியது.
- கடும் சொல் சொல்ல இயலாத மனிதாபிமானம் உடைய உயர்ந்த உள்ளங்கட்குரியது.
- சமூகத்தில் அனைவரும் திருமணம் செய்து கொள்கிறோம்.
- சமையல் செய்யவும், வம்சாவளி விருத்திக்கும் என அது கூறப்படுகிறது.
- திருமணம் நறுமணமாக மனம் மனத்தில் எழுவதுண்டு.
- மனமேயில்லாதவர் நிலையென்ன?

தொடரும்....

* * *

# பூரணயோகம் - முதல் வாயில்கள்

*(சென்ற இதழின் தொடர்ச்சி.....)*

*கர்மயோகி*

## 66. அழைப்பு உள்ளிருந்து எழுவது - ஆன்மீக விழிப்பு, ஆர்வம்.

- *மனமுடையவன் மனிதன்.*
- *பெரும்பாலும் அவன் மனத்தால் செயல்படுவதில்லை, உணர்வால் செயல்படுகிறான்.*
- *பெருவாரியான மக்கள் உடலாலானவர். மனமும், உணர்ச்சியும் அவர் அறியார்.*
- **ஆன்மா என்று ஒன்றுளது என வாழ்நாளில் அறியும் சந்தர்ப்பம் மனிதனுக்கு வருவதில்லை**.
- *பிரதமர், ஆனந்த் பால் பண்ணைக்கு வந்தபொழுது ஒரு விவசாயி வீட்டில் அவர் தனக்காகச் (விவசாயிக்காக) சமைத்த உணவைச் சாப்பிடப் பிரியப்பட்டு ஒரு வீட்டிற்கு முன்னறிவிப்பில்லாமல் வந்தார்.*
- *ஆன்ம விழிப்பு ஏற்படுவது அது போல.*
- *ஆன்ம விழிப்பு ஆண்டாளுக்கும், மீராவுக்கும், சேக்கிழாருக்கும் ஏற்பட்டது.*
- *ஆன்ம விழிப்பு ஏற்பட்டால் மனிதன் மகானாவான்.*
- *பக்தி, ஆர்வம் என்பது உணர்ச்சி ஆண்டவனை நோக்கிப் போய் தீவிரமுற்று முதிர்வது.*
- *அறிவு முதிர்ந்தால் மேதையாவான்.*
- *உடல் சிறப்படைந்தால் பீமனாவான்.*
- *வேகம் வீரமானால் தலைவனாவான்.*



- *பக்தி முதிர்ந்தால் பக்தனாவான்.*
- *நெஞ்சுக்குப் பின்னால் உள்ள மையம் விழித்தால், சைத்திய புருஷன் எழுவான். அது அவனைப் பூரண யோக சாதகனாக்கும்.*
- *சைத்திய புருஷன் வெளி வந்து, அவனே அன்னையை அழைப்பது யோக வாயில்.*
- *ஆண் பெண்ணை நாடுவது இயல்பு.*
- *பெண் ஆணை நாடுவது குறைவு.*
- *தகப்பனார் பெண்ணுக்குத் திருமணம் ஏற்பாடு செய்தபொழுது பெண் தான் மணமகனின் அண்ணனை விரும்புவதாகக் கூறி, தகப்பனார் அவ்வரனை முடிப்பது அரிது, பெரியது.*
- *நெஞ்சில் குரல் நெகிழ்ந்து ஆண்டவன் காதில் விழுவது அரிது.*
- *நெஞ்சுக்குள் உள்ள ஆண்டவன் விழித்து ஆண்டவனுக்குக் குரல் கொடுப்பது அரிதினும் அரிய சிறப்பு. அது யோக வாயில்.*
- *யோகங்கள் முடியும் இடத்தில் ஆரம்பிப்பது பூரண யோகம்.*
- *நாட்டுக்குத் தலைவனாவது ஏதோ சிலர் பெறுவது.*
- *நாட்டுக்குத் தலைவனான பின் வாழ்வு சர்வ தேச அரங்கில் வளர்வது உலகில் சிலருக்கே அமைவது.*
- *எலக்ஷனில் நிற்பவன் நண்பர்கள் ஆதரவைத் தேடுவான்.*
- *நண்பர்கள் கூடி ஒருவரை எலக்ஷனில் நிற்க அவர் சம்மதம் தேடுவது மனிதனை மனித நிலையைக் கடந்தவனாகும்.*
- *தாய்ப் பாசம், தாயன்பு உயர்ந்தது.*
- *அனைவரிடமும் தாயன்பு வெளிப்பட ஒருவர் பழகினால் அவர் ஆன்மா வெளிப்பட்டு உறவாடுகிறது என்று அறிவோம்.*
- *இது கற்பனைக்கெட்டாதது.*
- *கற்பனையில் உணர்வெழுவது ஆன்மா உள்ளவர்க்கே உரியது.*

- நெஞ்சில் நிறைந்தவர் என தான் விரும்புபவரை வர்ணிப்பார்கள்.
- ஆன்மா விழிப்படையும்பொழுது அதுவே நெஞ்சை நிரப்பிக் கொள்ளும்.
- நெஞ்சு அவ்வகையாக நிரம்பினால் அது குரல் எழுப்பும்.
- ஆன்மாவின் குரலை அசரீரி என்பர்.
- ஆன்மா அழைப்பை எழுப்புவது உடல் எழுப்பும் அசரீரி.
- அசரீரியை ஆதேஷ் எனவும், வாணி எனவும் ஆன்மீகம் கூறும்.

* * *

## 67. லோக சக்திகள் அன்பரின் எண்ணத்தைப் பூர்த்தி செய்வது - பிரபஞ்சமயம்.

- பகவான் ஸ்ரீ அரவிந்தர், "உலகம் தன் எண்ணங்களைத் தவறாது பூர்த்தி செய்தது. எவ்வளவு தாமதமானாலும் எண்ணம் பூர்த்தியாகத் தவறுவதில்லை" என்கிறார்.
- பகவானுடைய 5 பெரும் இலட்சியங்கள்: (1) இந்திய சுதந்திரம், (2) ஆசிய நாடுகளின் விடுதலை, (3) உலக சர்க்கார், (4) இந்தியா ஜகத் குருவாவது, (5) சத்திய ஜீவன் பிறப்பது.
- 1947இல் இலட்சியம் பூர்த்தியாயிற்று.
- அடுத்த 10 ஆண்டுகளில் 45 ஆசிய நாடுகள் விடுதலை பெற்றன.
- 1945இல் சான்பிரான்ஸிஸ்கோவில் ஐக்கிய நாடுகள் ஸ்தாபனமாயிற்று. அது உலக சர்க்காரின் முன்னோடி.
- 3ஆம் உலகப் போர் எழக்கூடாது என்ற பகவான் எண்ணம் அன்னை நிறுவிய ஆரோவில்லால் பூர்த்தியாயிற்று.
- இந்திய விடுதலையும், இரண்டாண்டிற்கு முன் ஜப்பான் சரணடைந்ததும் பகவான் பிறந்த நாளில் நடந்தது.



- 50 ஆண்டுகட்கு முன் ஐரோப்பா ஒன்றுபட வேண்டும் என்று கூறினார். அது நிறைவேறியது.
- மேல் நாடுகள், குறிப்பாக அமெரிக்கா இந்திய ஆன்மீகத்தைப் பெருவாரியாக அறிய முற்பட்டுள்ளன.
- அன்பர்கள் எண்ணமும் அது போல் பூர்த்தியாவதைக் காண்கிறோம்.
- தமிழ்நாடு பகவானை அறிய வேண்டும் என்ற ஆர்வமான அவா ஒரு அன்பருக்கு 30 ஆண்டு கழித்துப் பலித்தது.
- பாகிஸ்தான் 25 ஆண்டில் உடையும் என்றது 1972இல் பங்களாதேஷாக மாறியது.
- அன்பர்கள் எண்ணமும் ஓரளவு நாட்டிலும், உலகிலும் பலிக்கின்றது.
- விவசாயக் கடன் அது போல் 1970இல் நாட்டிலும், உலகிலும் பரவியது.
- போர்க் கிணறுகளும் பெருவாரியாக அப்படிப் பரவின.
- எழுதப் படிக்கத் தெரியாதவரைப் பட்டம் பெற அன்பர் உதவியதால் அந்த ஊரில் 73 பேர் அவரைப் பின்பற்றினர். தபால் படிப்பு வந்தது. வயதானால் எவரும் பட்டம் பெறலாம் எனச் சட்டம் வந்தது. சீர்திருத்தத் திருமணம் சட்டப்படிச் செல்லும் என்ற சட்டம் வந்தது.
- ஏழை மக்கள் மண்ணெண்ணெய்க்குக் கஷ்டப்படுவதைக் கண்ட அன்பர், சர்க்கார் எளிதில் கிடைக்க வசதி செய்ய வேண்டும் என்று நினைத்தபொழுது இலவசமாக ஏழை மக்களுக்குக் கிடைத்தது.
- அன்பர்கள் மேற்கொள்ளும் தொழில்கள் அபரிமிதமாகப் பரவுவதைக் காண்கிறோம்.

- ஒருவன் உழைப்பால் அதிக ஊதியம் பெறுவது அவன் மட்டும் பெறுவது.
- சட்டம் ஒரு தொழிலுக்குரிய சம்பளத்தை உயர்த்தினால், அனைவரும் அதைப் பெறுகின்றனர்.
- அன்னை ஜீவியம் பிரபஞ்சச் சட்டம்.
- அன்னை ஜீவியத்தால் ஒரு அன்பர் பெறுவது அவர் போன்ற அனைவரும் பெறுவது.
- பத்திரிகைச் சட்டம் ஒருவரைக் கைது செய்தது. அவர் பிரார்த்தனை அன்னைக்கு எட்டியபொழுது பத்திரிகைச் சட்டம் ரத்தாகி, அதனால் பாதிக்கப்பட்ட அனைவரும் பலன் பெற்றனர்.
- அன்பர்கள் பயிரிடும் எந்தப் பயிரும் அபரிமிதமாகப் பெருகும்.
- பூ பயிரிட்ட பொழுது பூந்தோட்டம் தமிழ்நாட்டில் பரவி, இன்று 25,000 ஏக்கர் பூ பயிராகிறது. தமிழ்நாட்டில் இந்தியாவிலேயே முதன்மையாகப் பூ பயிரிடப்படுகிறது.
- ஒரு அன்பர் செய்யும் காரியம் நாட்டில் பரவினால் அவருக்கு யோகம் பலிக்கும்.
- படிப்பு வராதவனைப் படிக்க வைத்தால் அவன் அமெரிக்கா போகிறான்.

  அவனையொட்டி நாட்டில் மேற்படிப்புக்கு அமெரிக்கா போவது பரவி, நாட்டில் வழக்கமாகிவிட்டது.

தொடரும்.....

* * *

**ஸ்ரீ அரவிந்த சுடர்**

**அதிகபட்ச நல்லெண்ணம் அளவு கடந்து பெருகினால் அவனுக்கு முன்னேற்றம் தேவையில்லை.**





## மரணமும் பொய்யும்

- மரணமிருப்பதால் வாழ்வில் பொய் உலவுகிறது என்பது ஒரு தத்துவம்.
- பொய் இருப்பதால் அது முற்றி மரணமாயிற்று என மற்றொரு தத்துவம்.
- எது சரி என எப்படிக் கூறுவது.
- ஏழைகள் பயப்படுகிறார்கள் என்றால்
- ஏழ்மை செயலில் பயமாக வெளிப்படுகிறது என அறிகிறோம்.
- ஆன்மீகத் தத்துவப்படி பயம் உள்ளவன் ஏழையாகிறான்.
- அடிப்படைக் கொள்கைகள் அறிவுக்குப் புலப்படா.
- அறிவைக் கடந்து ஆத்மாவுக்குப் புலப்படும்.
- ஆத்மாவை அடையுமுன் சூட்சும ஞானமான உள்ளுணர்வுக்குப் புலப்படும்.
- நேரடி ஞானத்திற்குப் புலப்படும்.
- அன்னையின் குருவான தியோன் சொல்வதை அன்னை அறிவார்.
- பகவான் கூறுவது, பிரம்மத்திலிருந்து சிருஷ்டியைப் பிரித்துப் புரிந்து கொண்டதால் இத்தவறு ஏற்பட்டது என்பது.
- ஏன் ஏற்பட்டது என்பதை விட எப்படி மாற்றுவது என்பதே அன்னையின் கேள்வி.
- திருவுருமாற்ற இரகஸ்யங்கள் பல:
  - ஆன்மாவில் சரணாகதியும்.

- ❍ *மனத்தில் எதிரியின் அபிப்பிராயமும்*
- ❍ *உயிரில் எதிரியை நண்பனாகக் கருதுவதும்*

*அந்த இரகஸ்யங்கள்.*

- *"அது போன்ற ஜடத்தின் இரகஸ்யம் எது எனத் தெரியவில்லை. பகவான் எனக்குக் கூறவில்லை.*

  *அவருக்குத் தெரிந்து சொல்லவில்லையா, தெரியவில்லையா என எனக்குத் தெரியாது" என அன்னை எழுதுகிறார்.*
- *உடலின் செல்களுடன் செய்த வேலை ஒளியை விட அதிக வேகமாக நடக்கின்றன.*

  *அவை முடிந்தால் தெரியும்.*

  *தெரிந்தால் பொய்யும், மரணமும் அழியும் என்கிறார் அன்னை.*
- *மனத்திலும், உயிரிலும் இரகஸ்யம் தெரிவதால் நாம் உடல் தவிர மற்ற எல்லா லோகங்களிலும் அவ்வெற்றியைப் பெறலாம்.*
- *மனம் வெற்றி பெற்றால் புரியாதது இருக்காது.*
- *உடலுணர்வு வெற்றி பெற்றால் பிரச்சினையிருக்காது.*

**ஆத்மா வெற்றி பெற்றால்** The Life Divine **புரியும்.**

* * *

**ஜீவிய மணி**

**தேடும் வரை கிடைக்காதது தெய்வம்.**

**தேட முடியாதவனைத் தேடுவது பிரம்மம்.**



## அன்பர்களும் அன்றாட வாழ்க்கை நெறிமுறைகளும்

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

*கர்மயோகி*

### 8. ஆன்மீக ஒளியும் கர்மப் பலனும்

*"பிறப்பறுக்கும் பிஞ்ஞகன் தன் பெய் கழல்கள் வெல்க" என்பது திருவாசகம். பிறப்பு கர்மத்தால் ஏற்பட்டது. முற்பிறவியின் கர்மமே இப்பிறப்பு. பிறவியிலிருந்து இறைவனின் திருவடி நீழல் விடுதலை அளிக்கும். அத்திருவடிகளைக் கனவிலிருந்து தரிசிக்க வள்ளலார் அவாவுகின்றார். அதற்கும் அவன் கருணை வேண்டும் அன்றோ? ''கண்ணேறு படுமென்றோ கனவிலேனும் காட்டென்றால் காட்டுகிலாய்" என்று வெதும்பிப் பாடுகின்றார் இராமலிங்க அடிகளார். பிறப்பிலிருந்து விடுபடுவது தவத்தின் நோக்கம். தவ முயற்சி பலித்தால், பிறப்புக்குக் காரணமான கர்மா கரைந்துவிடுகின்றது. அதனால், 'ரிஷிகளைக் கர்மா பாதிக்காது' என்பார்கள்.*

*"புல்லாகி, பூடாகி, பல் விருகமாகி..... மனிதன் பிறப்பெடுத்தான்" என்பது திருவாசகம். 'தசாவதாரம்' என்பது பூமியின் வரலாற்றைக் கூறுவது. 'இறைவன் பூமியில் இதுவரை 9 முறை அவதரித்து, சிருஷ்டிக்குத் தலைமை தாங்கி, அதன் போக்கை நிர்ணயித்தான்' என்பதே இதன் பொருள்.*

*சிருஷ்டி மனிதனுடன் முடிந்துவிடவில்லை. மனிதனுக்கு அப்பால் ஓர் அவதாரம் உண்டு. தானாக அது நடைபெற வேண்டுமானால், பல இலட்ச வருடங்களாகும். மனிதன் உலகில் உற்பத்தியாவதற்கும், அதற்கு முந்தைய சிருஷ்டிக்கும் நடுவில் பல்லாயிரக்கணக்கான ஆண்டுகள் இடைவெளி இருந்தது. அதே போல அடுத்த அவதாரம் தோன்றுவதற்கும் பன்னெடுங்காலம் ஆகலாம். ஆனால் இன்று இறைவன் வரும் தருணம். இது இறைவனுடைய நேரம்* (Hour of God).

மனிதன் மோட்சத்திற்காகவே தவத்தைச் செய்கின்றான். அதற்கு மாறாக, இறைவனின் திருவுள்ளத்தைப் பூர்த்தி செய்வதற்காக மட்டுமே தவம் செய்தால், அவதாரத்தைச் சிருஷ்டி செய்ய முயன்றால் அந்தத் தவம் 300 ஆண்டுகளில் பலிக்கும். "இறைவனுக்கு ஏற்ற கருவிகளாக 12 பேர் அமைந்தால், இன்றே அந்த அற்புதம் நடக்கும்" என்று ஸ்ரீ அரவிந்தர் கூறுகின்றார். அந்த யோகத்திற்குப் 'பூரண யோகம்' என்று அவர் பெயரிட்டிருக்கின்றார்.

அந்தப் பூரண யோகம் அவருக்கும், அதற்கு அடுத்த கட்டத்தில் அன்னைக்கும் பலித்தது. அவர்கள் இறைவனின் கருவிகளாக மட்டுமே செயல்பட்டார்கள். 'அந்த யோக சித்தியின் முழுப் பலன் பூவுலக மாந்தர் அத்துணைப் பேருக்கும் கிடைக்காத வரையில், தங்கட்குத் தனிப் பலன் தேவை இல்லை' என்ற இலட்சியத்தை மேற்கொண்டு, பூவுலகம் அப்பலனை விரைவில் பெறுவதற்காக, அவர்கள் தம் யோகத்தைச் சூட்சும உலகிலிருந்து தொடர முடிவு செய்து, சமாதியானார்கள்.

இவை எல்லாம் யோகம்; தத்துவம். 'பிறவியிலிருந்து விடுபட்டால், கர்மம் அழிந்துபோகின்றது' என்பதை நாம் அறிவோம். பிறவியை அடுத்த சிருஷ்டிக்கு எடுத்துச் செல்லும் இந்த யோக சக்திக்குக் கர்மத்தை முழுமையாக அழிக்கும் வல்லமை உண்டு. கர்மத்தை அழிக்காமல் கர்மத்தால் எடுத்த பிறவியை என்ன செய்யலாம்? கர்மத்தை அனுபவிக்கலாம். பிறவியின் அடிப்படைக் கூறுகள் அறவே அழிக்கப்பட்டால்தான், பிறவியைத் தோற்றுவித்த கர்மம் கரைந்தால்தான், அதிலிருந்து அவதாரம் பிறக்கும். யோகத்தின் குறிக்கோள் அதுவேயாதலால், இந்த யோக சக்திக்குக் கர்மத்தின் வேரை அறுக்கும் திறன் முழுமையாக உண்டு.

தவம் இறைவனை நோக்கி மனிதன் செல்லும் ஞானப் பாதை. அருள், இறைவன் மனிதனை நோக்கி வரும் செயல். இறைவன் வரும் தருணமான இன்று இறைவன், 'மனிதன் தன்னை



ஏற்றுக்கொள்ள வேண்டும்' என விரும்பி, மனிதனை நோக்கி விரைந்து வருகின்றான். இத்தகைய நலம் பயக்கும் தருணத்தில், ஆயிரம் ஆண்டுகளில் நடக்கக்கூடியவை கண நேரத்தில் நடக்கும்.

அன்னை, இறைவனின் சக்தி. அன்னை, இறைவனின் திருவுள்ளத்தை மனிதனுடைய பிறவியில் இட்டு நிரப்புவதற்காக ஆர்வத்துடன் செயல்படுகின்றார். அன்னையை ஏற்றுக்கொண்டவர்களின் வாழ்க்கையில் நடக்கும் செயல்களுக்கு மேற்சொன்ன பெரிய தத்துவங்களின் சாயல் உண்டு. அதாவது, மனிதனுடைய கர்மம் கரைந்துபோகின்றது. நெடுநாள் முயன்று பெற வேண்டியவை ஒரே நாளில் கிடைக்கின்றன. கேட்டது கிடைக்கின்றது; கேட்டதற்கு அதிகமாகவும் கிடைக்கின்றது; கேளாதவையும் கிடைக்கின்றன. மனிதன் உப்பு, புளி, மிளகாய், துணி, பணம் என்று மட்டுமே கேட்கப் பழகிக்கொண்டு இருக்கின்றான். மீதி அவனுக்குத் தெரியாது; தோன்றாது. ஸ்ரீ அரவிந்தர் அவனை நோக்கி, "இது உயர்ந்த யோகச் சக்தி. நீ எது வேண்டுமானாலும் கேட்கலாம். ஆனால், 'எனக்கு இறைவன் மட்டுமே தேவை' என்று கேட்பது ஒன்றுதான் சிறந்தது" என்கிறார்.

யோகியின் தவமும், சாதாரண மனிதனின் நோன்புகளும் வாழ்வின் சிறப்பான பெருமுயற்சிகள். அன்னையை ஏற்றுக்கொள்பவர்கள் முழுமையாக அன்னையின் தெய்வ நிலையை உணர்ந்து ஏற்றுக்கொண்டால், அன்னையின் சக்தியும், அருளும் பேரளவில் திரண்டு அவர்கள் வாழ்க்கையில் இடையறாது செயல்படும். ஆனால் மனிதனால் அன்னையைப் பூரணமாகப் புரிந்துகொள்ள முடியவில்லை. எப்படிப் பூரணமாகப் புரிந்துகொள்வது? உண்மையான பக்தனுக்கும்கூட, பரம்பரை பரம்பரையாக ஊறிப்போன தியானம், மந்திரம், ஸ்தோத்திரம் ஆகியவற்றில் பூரண நம்பிக்கை இருக்கிறது. அந்த நம்பிக்கையின் அடிப்படையில் அவன் மந்திரம் ஜபிக்கின்றான்; தியானம் செய்கின்றான்; அன்னையின் மீதுள்ள பக்தி

உணர்ச்சிபூர்வமாகவும், பவித்திரமாகவும் இருந்தாலும், ஒரு மந்திரத்தை ஜெபித்தால்தான் அவனுக்கு நிம்மதியாக இருக்கின்றது.

ஆனால் இந்த மரபு வழிப் பழக்கங்களுக்கு அப்பால் செயல்படுகின்றது அன்னையின் அருள். அதற்கு இவை எல்லாம் தேவையில்லை. என்றாலும், மனிதன் இதை உணரமாட்டான். அவனுக்குக் கற்றுக் கொடுக்கப்பட்டிருக்கிற விதத்தில்தான் அவனால் உணர முடியும். 'தெய்வத்தைச் சேர்வதற்கு மந்திரம், தியானங்கள் அவசியமில்லை' என்று கூறினால் வெறுப்பான்; அல்லது சொன்னவர்களை வெறுப்பான். இவற்றை எல்லாம் கருதி, மனிதனால் விட முடியாதவற்றை அவனுடைய உண்மையான பக்தியைப் போற்றி அப்படியே ஏற்றுக்கொண்டு, அவன் கோரியதற்கு ஏற்றவாறு மந்திரங்களை எழுதிக் கொடுக்கிறார் அன்னை. மேலும் வாரம் தவறாமல் தியானக் கூட்டங்களுக்கும் ஏற்பாடு செய்கின்றார்.

கர்மத்தைக் கரைக்க அன்னை கையாளும் முறைகள் பல. ஆணவம் கர்மத்தின் உறைவிடம். ஆகையால், "ஆணவத்தை முழுமையாகக் கரைத்துவிட வேண்டும்" என்றார் அன்னை. அப்படிக் கரைந்துவிட்ட பிறகு கர்மம் தங்கிச் செயல்பட ஒரு முக்கியமான இடம் இல்லாமல் போய்விடுகின்றது அன்றோ?

ஜீவாத்மா ஆணவ மலத்தால் மூடப்பட்டிருக்கின்றது. யோகிக்கு தன் தவச் சிறப்பால் ஆண்டவனை அல்லது பராசக்தியை அடைய முடியும் என்ற நிலை ஏற்படும்பொழுது அவனது ஜீவாத்மா இறைவனை நோக்கிச் செல்கின்றது. முடிவில் வெற்றி பெறுகின்றது. வெற்றி கிட்டியவுடன் ஜீவனுக்கு ஒரு விஷயம் புரிகின்றது. 'நான் என் மீது படிந்துள்ள கறையை நீக்காமல்தான் இருப்பேன். என்றாலும், தவச் சிறப்பினால் இறைவனை அடைந்தேன். நான் இடம் விட்டுப் பெயர்ந்து இங்கு வந்தபோதிலும்கூட, இன்னும் ஆணவத்தின் பிடியில்தான் இருக்கின்றேன். அதை மீறிச் செயல்பட என்னால் முடியவில்லை' என்பதுதான் ஜீவன் புரிந்துகொண்ட விஷயம்.



ஜீவன் இவ்வாறு கழிவிரக்கம் கொண்டு வாடும்பொழுது, ஆணவம் வேறொரு கதியில் விரைந்து, கிடைத்திருக்கும் பெரிய சக்தியை, இறைவனுடைய சக்தியை, கொண்டு தன் பெருமைகளைப் பூர்த்தி செய்யத் தொடங்குகின்றது.

இந்த ஆபத்தைத் தவிர்ப்பதற்கு உபாயம் கூறுகின்றார் ஸ்ரீ அரவிந்தர்: "ஜீவாத்மா சக்தியை நோக்கிப் போவதற்குப் பதிலாக, அந்த ஜீவாத்மாவின் மீதுள்ள கறையைக் கரைக்க பக்தன் முயல வேண்டும்" என்கிறார்.

அவனுடைய முயற்சி பலித்து, ஜீவாத்மா கறையிலிருந்து விடுபட்டு விட்டால், சக்தி ஜீவனை நோக்கி வருகின்றது. அந்த நிலையில் அங்கு ஆணவம் இல்லை. இனி இறைவனின் திருவுள்ளமே செயல்பட முடியும். இது யோகத்திற்காக ஸ்ரீ அரவிந்தர் வகுத்த முறை. அதைப் பின்பற்றும்பொழுது மனிதனுடைய கர்மம் தானாகவே கரைந்துபோகின்றது. தன் உறைவிடத்தை இழந்து, உரிமையை இழந்து, கடைசியில் தன் உயிரையே இழந்து, தொலைந்துபோகின்றது கர்மம்.

கர்மம் வெளிப்பட மனிதனிடம் உள்ள கருவிகள் மூன்று. அவை: ஆணவம், குணச் சிறப்புகள், சுபாவம். ஆணவத்தை இழந்தால், கர்மம் பேர் அளவில் குறைந்துபோகும். யோகம் பலித்த நிலையில் ஆணவம் முழுவதும் அகலும்.

ஒருவர் அன்னையை ஏற்றுக்கொண்டவுடன், அவர் எந்த அளவு ஏற்றுக் கொண்டாரோ, அந்த அளவில் அன்னையின் ஒளி அவரை வந்து அடைகின்றது. அவ்வொளி ஆணவத்தின் ஆணிவேரை அரிக்க ஆரம்பிக்கின்றது. ஆணிவேரை அன்னையின் ஒளி அழிக்க முயன்றாலும், மனித சுபாவம் என்றும்போல் செயல்படுவதால், அதன் துணையை விடாப்பிடியாகப் பற்றிக்கொண்டு கர்மம் பிழைத்து இருக்கும். இதுவே குண இயல்புக்கும் பொருந்தும்.

எல்லாருக்கும் கோபம் வருகிறது. கோபம் எப்பொழுதுமே நன்மை விளைவிப்பதில்லை. ‘சுபாவம்’ என்பது கோபத்தின் மூலம்தான் வெளிப்படுகின்றது. ஒருவனுக்கு ஒரு வகையான கர்மம் இருந்தால், அந்தக் கர்மம் தான் வெற்றி அடைவதற்குக் கோபத்தைக் கருவியாகக் கொண்டால், அந்தக் குறிப்பிட்ட மனிதருக்குக் கோபமானது மற்றவர்களுக்கு விளைவிப்பதைப் போலன்றி, கர்மப் பலனை விளைவிக்கும்; பெரிய பாதகமான விளைவுகளை உண்டு பண்ணும். அன்னையின் ஒளி காரணமாகக் கர்மம் வேரிலேயே பலம் இழந்திருந்தாலும்கூட, அவருக்குக் கோபம் வரும்வரையில் கர்மம் ஓரளவு பாதகமான பலன்களையே தந்துகொண்டிருக்கும். கர்மப்பலனை விலக்க வேண்டுமானால், முதலில் அவர் கோபத்தை விலக்க வேண்டும்.

யார்தான் சூதாடவில்லை? மன்னர்கள் சூதாட்டத்தை ஒரு பொழுது போக்காகவே வைத்துக்கொண்டிருந்தார்கள். அவர்களில் யாருக்கும் ராஜ்யங்கள் போகவில்லை. ஆனால் தர்மனுக்கு மட்டும் ராஜ்யம் போயிற்று, ஏன்? அவனுக்குச் ‘சூது’ என்றால் மிகவும் விருப்பம். விருப்பம் இழப்பாயிற்று. அவனுடைய கர்மா, சூது மூலம் பலித்து, அவனை அலைக்கழித்தது.

வீறாப்பாகப் பேசுபவர் பலர். அதனால் வெற்றி அடைந்தவர்களும் உண்டு; அவமானப்பட்டவர்களும் உண்டு. ஒருவருடைய கர்மம் வீறாப்பின் மூலம் வெளிப்படுமானால், கிடைப்பது அதன் (கர்ம) பலனாக இருக்கும். கர்மத்திலிருந்து விடுபட ஆணவத்தை விலக்குவது போல், எந்தச் சுபாவத்தின் மூலம் தனது கர்மம் வெளிப்படுகின்றதோ, அந்த சுபாவத்தை விலக்க முன்வர வேண்டும். கர்மம் கெட்ட சுபாவத்தின் மூலம்தான் வரும் என்பதில்லை; நல்ல சுபாவத்தின் மூலமும் வெளிப்படும். கொடை பெரிய குணம். கர்ணனுக்கு மிஞ்சிய கொடையாளி இல்லை. ‘குரு க்ஷேத்திரப் போரில் பாண்டவர் வெல்ல வேண்டுமானால், கர்ணன்



மடிய வேண்டும். அது ஒருக்காலும் நடக்கப்போவது இல்லை. ஏனென்றால், கர்ணனின் மார்பிலிருந்த கவசமும், காதுகளிலிருந்த குண்டலங்களும் உள்ள வரையில் அவன் உயிரைப் பறிக்க முடியாது. ஆகவே, அவனிடமிருந்து அவற்றைப் பறிக்க வேண்டும்’ என்று முடிவு செய்த கிருஷ்ணன், இந்திரனை அந்தணன் வேடம் தாங்கச்செய்து, கர்ணனிடமிருந்து குண்டலங்களைத் தானமாகக் கேட்கிறான். ‘அவற்றைக் கொடுத்தால் தன் உயிர் போய்விடும்’ என்று தெரிந்துகொண்டே, ‘இல்லை’ என்று சொல்லி அறியாத கர்ணன், அந்தணனுக்குக் கவச, குண்டலங்களை அறுத்துத் தருகிறான். பின்னர் போர்களத்தில் அர்ச்சுனன் அம்பால் கர்ணன் வீழ்ந்தபோது, அவன் உயிரைத் ‘தர்மம்’ கவசமாக இருந்து காக்க, கிருஷ்ணர் அந்தணர் வடிவிலேயே சென்று அதைக் கேட்க, தர்மப்பலனைத் தாரைவார்த்துக் கொடுக்கிறான். அடுத்த கணம் அவன் உயிர் பிரிகின்றது.

கொடுப்பது கர்ணனின் சுபாவம். அது சுபாவங்களில் சிறந்த சுபாவம். ஆனால், அதுவே கர்ணனின் மரணத்திற்குக் காரணமாக அமைந்துவிட்டது. ஆக, சுபாவத்தின் மூலம் கர்ணனுடைய கர்மம் தன்னைப் பூர்த்தி செய்து கொண்டுவிட்டது.

தன்னால் கட்டுப்படுத்த முடியாத எந்தச் சுபாவத்தின் மூலமும் கர்மம் வெளிப்படும். பூரண யோகத்தில் ஆணவம் கரைக்கப்படுவது போல, சுபாவத்தை ஒதுக்கி, இறைவனின் கடமையை ஏற்றுக்கொள்ள வேண்டும். அதனால்தான் தன் சுபாவத்தை விட்டு மீள்வதற்குப் பக்தன் எடுத்துக்கொள்ளும் எந்த ஒரு முயற்சிக்கும் அன்னை பெரும்பலன் அளிக்கின்றார்.

யோக சித்தி பெறுவது பெரிய விஷயம். அந்த உச்சியிலிருந்து இறங்கி வந்து கர்மத்திலிருந்து விடுபடக்கூடிய சிறிய இலட்சியத்தை ஒரு சாதாரண மனிதன் மேற்கொள்வதாக இருந்தால், அவன் என்ன செய்ய வேண்டும்?

1. அன்னையை அறிவால் புரிந்து மனத்திலும், உணர்வால் பெருக்கி நெஞ்சிலும், இலட்சியமாக விரித்து வாழ்விலும் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

68 வயதான அன்னையின் அன்பரும், 'அமுதசுரபி' வாசகருமான ஒரு பெரியவர், தம் வீட்டுத் தோட்டத்தில் நின்றுகொண்டு வானை நோக்கி, அன்னையை நினைந்து, பிறகு தம்மை மறந்து, உணர்ந்து, நெகிழ்ந்து, பல விதமான உந்துதல்களுக்கு ஆளாகி இருந்தபொழுது, வானில் வைரத்தோடு அளவில் ஓர் ஒளி தோன்றி அவரை நோக்கி வந்து அவரது புருவங்களின் மத்தியில் (ஆக்ஞா சக்கரம்) புகுந்து, அவரோடு ஐக்கியமாயிற்று. அவரைப் போன்ற நெகிழ்ந்த உணர்வு மிகுந்த அன்னையின் அன்பர்களுக்கு, அது போன்ற அரிய அனுபவம் கிடைக்கின்றது. அன்னை அந்த நேரத்தில் அந்தப் பெரியவருக்கு சூட்சுமப் பார்வையைக் கொடுத்ததால், அந்த ஒளி அவர் கண்களுக்குத் தெரிந்தது. மற்ற அன்பர்களுக்கும் இதே பலன் உண்டு. என்றாலும், அந்த ஒளி அவர்கள் கண்களுக்குத் தெரிவதில்லை.

2. அன்னையை ஏற்றுக்கொண்ட பிறகு எண்ணங்கள் சிறப்பு அடையும்; உணர்ச்சிகள் கட்டுப்படும்; சுபாவம் பக்குவத்திற்கு ஆளாகும். நாம் அந்த மாறுதல்களுக்குத் துணை செய்யும் விதத்தில் செயல்பட வேண்டும்.

3. அவ்வாறல்லாமல் எண்ணங்களும், உணர்ச்சிகளும், சுபாவமும் முனைப்பாக இருந்தால், நாம் நெறி பிறழாது நின்று, அவற்றின் பிடியில் இருந்து விலக முனைய வேண்டும்.

தவறு செய்து அதனால் கஷ்டப்படுகிறவர்கள், 'என்ன செய்வது? என் நேரம். நேரத்திற்கேற்ப புத்தி. அதனால் நான் இந்தத் தவற்றைச் செய்துவிட்டேன். இப்பொழுது அதன் பலனை அனுபவிக்கிறேன்' என்பார்கள்.



லோக சஞ்சாரம் செய்துகொண்டிருந்த மகாவிஷ்ணுவும், மகாலட்சுமியும் தம் பக்தனான ஓர் ஏழைக்கு உதவ முன்வந்து, அவன் நடந்து வந்துகொண்டிருந்த பாதையில் ஒரு தங்கக்கட்டியைப் போட்டார்கள். அந்தச் சமயத்தில் அந்த ஏழைக்கு ஒரு விசித்திர எண்ணம் தோன்றியது. 'குருடன் எப்படி நடப்பான் என்று பார்க்கலாமா?' என்று எண்ணி, கண்களை மூடிக்கொண்டு நடக்க ஆரம்பித்தான். அதனால் பாதையில் கிடந்த தங்கக்கட்டியை அவனால் பார்க்க முடியாது போயிற்று. கடவுள் கொடுக்கத் தயாராக இருந்தாலும், விதி அவனை அனுபவிக்க விடவில்லை.

விதி வலிது. அவதாரப் புருஷனான இராமனின் முன் மாயமான் தோன்ற, சீதை அதைப் பார்த்து ஆசைப்பட, விதி அவர்களைக் கொண்டே தன் வேலையைச் செய்து முடித்துவிட்டது.

விதியானாலும், கர்மமானாலும் மனிதனுடைய ஒத்துழைப்பின்றிச் செயல்பட முடியாது. அன்னை அப்படிப்பட்ட நேரங்களில் தம் பக்தனுக்குத் துணை செய்கின்றார். ஆனால், அவனுடைய ஒத்துழைப்பு இல்லாமல் அன்னையால் செயல்பட முடியாது. பக்தன் பண்பட்ட பாத்திரமாக இருந்து, அன்னையின் அருள் செயல்படுவதற்கு முழுமையாக உதவ வேண்டும்.

இளைஞர் ஒருவர் அன்னையிடம் தீவிர ஈடுபாடு கொண்டவர். தம் வாழ்க்கை கொஞ்சம் கொஞ்சமாக அன்னையின் பிடிக்குள் சென்றுகொண்டு இருப்பதை அவர் ஒவ்வொரு கணமும் உணர்ந்தார். அன்னையின் நாமாவே அவரின் ஸ்மரணையாயிற்று.

ஒரு நாள் அவருடைய மைத்துனன் கிராமத்திலிருந்து வந்திருந்தான். அவன், அவருடைய மனைவியையும் குழந்தையையும் தன்னுடன் அழைத்துப் போக விரும்பினான். அதற்கு அவரும் ஒப்புதல் கொடுத்தார்.

அவர் ஒரு வியாபாரி. ஒவ்வொரு நாளும் கடைக்குப் புறப்பட்டுப் போகும் பொழுது சமாதிக்குச் சென்று சற்று நேரம் தியானம் செய்வது அவர் வழக்கம். அன்றும் அவர் வழக்கம் போல சமாதிக்குச் சென்று தியானம் செய்தார். தியானத்தில் 'குழந்தையை ஊருக்கு அனுப்பாதே!' என்று ஒரு குரல் கூறியது. அதை அவர் அவ்வளவாகப் பொருட்படுத்தவில்லை. வீட்டுக்கு வந்தார். பிரயாணத்தைப் பற்றிப் பேச்சு எழுந்தது. தியானத்தில் கேட்ட அதே குரல், 'குழந்தையை ஊருக்கு அனுப்பாதே!' என்று எச்சரித்தது. அப்படி ஒரு முறை, இரு முறை அல்ல, பிரயாணம் பற்றிப் பேசும்போதெல்லாம் பல முறை எச்சரித்தது. ஆனாலும், அந்த அன்பர், 'ஒப்புக்கொண்ட பிறகு குழந்தையை அனுப்பமாட்டேன் என்று கூறுவது நல்லதன்று' என்று நினைத்தார். உள்ளிருந்த குரல் அதை வேகமாக மறுத்தது என்றாலும், அவர் குரலை மறுத்து, குழந்தையை ஊருக்கு அனுப்பினார். மறுநாள் குழந்தை இறந்துவிட்டதாகச் செய்தி வந்தது.

கர்மத்திலிருந்து காப்பாற்ற இவ்வாறெல்லாம் வழிகாட்டுவார் அன்னை. ஆனால் நம் சுபாவத்திலிருந்தும், மூட இயல்புகளிலிருந்தும் விடுபட்டால்தான் அன்னை தரும் பலன்களை நாம் முழுமையாக அடைய முடியும்.

*தொடரும்....*

* * *

**ஜீவிய மணி**

**மனம் செய்யாததை பணம் செய்யாது.**

**பணம் செய்யாததையும் மனம் செய்யும்.**



# Infinityயினுடைய ஆற்றல் (பாகம் 2)

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

N. அசோகன்

இதுவரையிலும் Finite மனப்பான்மையாகப் பத்து கருத்துகளையும் அதற்கு நேர் எதிராக Infinite மனப்பான்மையாக பத்து கருத்துகளையும் எடுத்து விளக்கினேன். Finite மனப்பான்மையின் அடிப்படை அம்சம் என்னவென்றால் எந்த ஒரு விஷயமாக இருந்தாலும் சம்பந்தப்பட்டவர்கள் இதில் தனக்கு என்ன ஆதாயம், தனக்கு என்ன அசௌகர்யம் என்று பார்ப்பதுதான். எதையும் தன்னுடைய கண்ணோட்டத்திலிருந்து பார்ப்பது என்பது மனிதனுடைய உடம்போடு ஒட்டிப் பிறந்த ஒரு சுபாவம் போலிருக்கிறது. அதை மாற்ற வேண்டும் என்றால் அது நாய் வாலை நிமிர்த்தும் கதையாகக் கூட இருக்கலாம். இருந்தாலும் நம் வாழ்க்கையில் Infinity மலர வேண்டும் என்றால் எதையும் நம் கண்ணோட்டத்திலிருந்து பார்த்து அதோடு நிறுத்திக் கொள்வது என்ற இடத்திலிருந்து நாம் மாறித்தான் ஆக வேண்டும். அடுத்தவரோடு நமக்கு ஒரு வேலை வந்தால் இவரிடமிருந்து நாம் என்ன பெற்றுக் கொள்ளலாம் என்றுதான் யோசிப்போம். நம்முடைய கவனம் எல்லாம் அடுத்தவரோடு உள்ள interactionஐ நமக்குச் சாதகமாக எப்படி வைத்துக் கொள்வது என்பதில்தான் உள்ளது. அதாவது ஒவ்வொரு விஷயத்திலும் ஆதாயத்தைப் பெற்றுக் கொள்வதில்தான் நாம் குறியாக இருக்கிறோம் என்பதை இது காட்டுகிறது. இது Finite மனப்பான்மைக்கே உரிய மனநிலை. இப்படிப்பட்ட மனநிலையை வைத்துக் கொண்டு நாம் எந்த ஒரு பெரிய வளர்ச்சியையும் பார்க்க முடியாது. மாறாக யாரோடு எத்தகைய interaction நமக்கு வந்தாலும், அவர்களுக்கு நாம் என்ன கொடுக்க முடியும், நாம் என்ன செய்ய முடியும் என்று நினைத்துப் பார்த்தோம் என்றால் அது Infinityக்கு உகந்த மனநிலையாகும். வியாபார நிறுவனங்களில் வேலை செய்யும் ஊழியர்கள் தம்முடைய சம்பளத்தை அதிகரித்துக் கொள்வதிலேயே

குறியாக இருப்பார்கள். இப்படி இருக்காமல் கம்பெனியின் நலனுக்காகத் தங்களால் மேலும் என்ன செய்ய முடியும் என்று கம்பெனியின் கண்ணோட்டத்திலிருந்து பார்த்துச் செயல்பட்டார்கள் என்றால் கம்பெனியும் வளரும், கூடவே இவர்களும் வளர்வார்கள்.

விஞ்ஞானிகளும் கண்டுபிடிப்பாளர்களும் பகுத்தறிவை நம்பிச் செயல்படுவதாக நாம் நினைத்துக் கொண்டிருக்கிறோம். ஆனால் உண்மை நேர் எதிர்மாறாக உள்ளது. தங்களுடைய பகுத்தறிவை விட தங்களுக்குக் கிடைக்கின்ற உள் எழுச்சியைத்தான் (inspiration) விஞ்ஞானிகள் அதிகம் மதிக்கிறார்கள். தங்களுடைய பகுத்தறிவு சொல்வதைக் காட்டிலும் தங்களுக்கு வரும் inspiration எதை உணர்த்துகிறதோ அது தான் சரியாக இருக்கும் என்று பல விஞ்ஞானிகளும் கண்டுபிடிப்பாளர்களும் நம்புவதாகத் தெரிகிறது. Albert Einstein அவர்கள் ரிலேட்டிவிட்டி தியரிக்காக நோபல் பரிசு வாங்கிய தலைசிறந்த விஞ்ஞானி ஆவார். அவரே எந்த ஒரு சிறந்த விஞ்ஞானியும் inspiration இல்லாமல் எந்த ஒரு பெரிய உண்மையையும் கண்டுபிடிக்க முடியாது என்று திட்டவட்டமாகத் தெரிவித்திருக்கிறார். டார்வின் மற்றும் கலீலியோ போன்ற பெரிய விஞ்ஞானிகளும் சமூகம் அவர்களுடைய கண்டுபிடிப்புகளை ஏற்க மறுத்தபொழுது விடாப்பிடியாக அவர்கள் கண்டறிந்த உண்மைகளைக் கைவிடாமல் வலியுறுத்திக் கொண்டுதான் இருந்தார்கள். அந்த அளவுக்கு அவர்களுடைய கண்டுபிடிப்புகளைத் திடமாக நம்பியதற்குக் காரணமே இந்த உண்மைகள் எல்லாம் அவர்களுக்குக் கிடைத்த inspiration மூலம் உணர்த்தப்பட்ட உண்மைகள் தான். இப்படிப்பட்ட inspiration எல்லாம் பகுத்தறிவை நம்பி இருப்பவர்களுக்கு வாராது. முழுமையை பார்ப்பவர்களுக்குத்தான் inspirationஏ வரும். முழுமை infinityஐச் சார்ந்தது. டார்வின் மனிதனைத் தனித்துப் பார்க்கவில்லை. உயிரினங்களின் பரிணாம வளர்ச்சியில் மனிதனை ஒரு அங்கமாகத்தான் பார்த்தார். இப்படிப் பரிணாம வளர்ச்சி என்ற முழுமையைப் பார்த்தபொழுது மனிதன் குரங்கிலிருந்து பிறந்தவன்



என்ற உண்மை அவருக்கு விளங்கியது. அம்மாதிரியே கலீலியோ அவர்களும், பூமியைத் தனியாகப் பிரித்துப் பார்க்கவில்லை. சூரிய மண்டலத்தின் ஒரு அங்கமாகத்தான் பூமியைப் பார்த்தார். அந்த முழுமையான பார்வைக்குப் பூமிதான் சூரியனைச் சுற்றுகிறது, சூரியன் பூமியைச் சுற்றவில்லை என்ற உண்மை அவருக்கு விளங்கியது. ஆனால் மனிதனையும் பூமியையும் பிரித்துப் பார்த்த கத்தோலிக்க மதத்திற்கும் அறிவில்லாத பொதுமக்களுக்கும் மனிதன் குரங்கிலிருந்து தோன்றினான் என்பதோ மற்றும் பூமிதான் சூரியனைச் சுற்றுகிறது என்பதோ ஏற்புடையதாக இல்லை. பிரித்துப் பார்க்கின்ற அவர்களுடைய சிறிய பகுத்தறிவுக்கு இந்தப் பெரிய உண்மை விளங்கவில்லை. இந்தப் பெரிய உண்மையை ஏற்றுக் கொள்ளச் சமூகத்திற்கு மேலும் பல வருடங்கள் தேவைப்பட்டது.

Finite மனநிலை எல்லா முழுமைகளையும் எதிர் எதிராகச் செயல்படும் இரு துருவங்களாகப் பிரித்துப் பார்க்கிறது. மேனேஜ்மெண்ட் மற்றும் ஊழியர்கள், அரசாங்கம் மற்றும் வரி கட்டும் பொதுமக்கள், விற்பவர்கள் மற்றும் வாங்குபவர்கள், இவர்கள் எல்லாம் நிறையச் சந்தர்ப்பங்களில் எதிரிகளைப் போல நடந்து கொள்கிறார்கள். ஆனால் உண்மையில் இவர்கள் எல்லோரும் எதிரிகளே இல்லை. இவர்கள் எல்லாரும் ஒற்றுமையாகச் செயல்பட்டால் இவர்களுடைய உறவு வளரும். மேலும் இவர்கள் சம்பந்தப்பட்டுள்ள குடும்பங்கள், ஸ்தாபனங்கள், வியாபார நிறுவனங்கள் மற்றும் சமூகம் என்று எல்லாமே நல்ல வளர்ச்சியைக் காணும். ஆகவே இவர்களுக்கிடையே உள்ள முரண்பாடுகளை இவர்கள் கவனிக்காமல் முரண்பாடுகளாகத் தெரிபவை எல்லாம் உடன்பாடுகள் என்று புரிந்து கொண்டு செயல்பட்டார்கள் என்றால் அப்பொழுது அவர்கள் முழுமையை உணருகிறார்கள் என்று அர்த்தமாகிறது. அந்த முழுமைக்கு வரம்பில்லாத வளர்ச்சி வரும்.

Physical levelலிலும், மற்றும் உணர்வு நிலையிலும், அறிவு நிலையிலும் நாம் முழுமையை உணரும்பொழுதே நமக்கு இப்படிப்பட்ட

*வளர்ச்சி கிடைக்கிறது என்றால் உலகத்தின் ஆன்மீக முழுமையை நாம் உணர்ந்தோம் என்றால் அதை நடைமுறை வாழ்க்கையில் வெளிப்படுத்தினோம் என்றால் எத்தகைய வரம்பில்லாத வளர்ச்சி நமக்குக் காத்திருக்கிறது என்பதை நாம் உணர வேண்டும். அதை உணர்ந்து, அதற்கேற்றபடி நம் செயல்பாடுகளை மாற்றினால்* Infinity *நம் வாழ்க்கையில் மலர்வதை நாம் உடனே பார்க்கலாம்.*

*முற்றும்.*

* * *

**ஜீவிய மணி**

**பணம் தேடி வருவது பக்குவம்.**

**ஜீவிய மணி**

**பொங்கி வரும் சந்தோஷம் பூரணமான பாதுகாப்பு.**

**ஸ்ரீ அரவிந்த சுடர்**

**பிறர் பொய்யை நம் உண்மையாக அறிய வேண்டும்.**

**ஜீவிய மணி**

**பெற்றதைப் போற்றிக் காப்பாற்ற வேண்டும்.**



## Sri Aurobindo and the Tradition

## ஸ்ரீ அரவிந்தரும், மரபும்

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

கர்மயோகி

56. Darkness is evil incarnate for the tradition.
**Darkness, says Bhagavan, is dense light.**
*மரபில் இருள் என்பது தீமையின் அவதாரம்.*
**அடர்ந்த ஒளியே இருள் என்கிறார் ஸ்ரீ அரவிந்தர்.**

57. Heaven and hell are realities in the tradition.
**Heaven and hell are conditions of Mind, not places of resort.**
*மரபில் சொர்க்கமும், நரகமும் மெய்யானவை.*
**ஸ்ரீ அரவிந்தர் சொர்க்கமும் நரகமும் மன நிலைகள், ஒய்வெடுக்கும் இடங்களல்ல என்கிறார்.**

58. Vibhutis and Avatars are emanations of the Spirit in the tradition.
**Sri Aurobindo is a Portion of the Lord, who came down on earth to announce the arrival of the Hour of God, for which He worked for aeons.**
*மரபில் விபூதிகளும், அவதாரங்களும் ஆன்மாவின் சிறு பொறிகள்.*
**ஸ்ரீ அரவிந்தர் இறைவனின் ஒரு பகுதி. இறைவனின் தருணம் வந்துவிட்டது என்பதை அறிவிக்க உலகத்திற்கு வந்தார். அதற்காக அவர் மகத்தான காரியங்களைச் செய்தார்.**

59. The universe, says the tradition, is a seven-fold chord of Being.
**To Him, it can be an eight-fold chord of Being.**

*மரபில் புருஷனுக்கு ஏழடுக்கு உண்டு.*

**அது எட்டடுக்காக இருக்க முடியும் என்கிறார் ஸ்ரீ அரவிந்தர்.**

60. Tradition states the concept of evolution, but does not explain it.

**To Sri Aurobindo, evolution is the central basis of His Philosophy.**

*மரபு பரிணாமம் என்ற கருத்துருவைப் பற்றிக் குறிப்பிட்டாலும் அதை விளக்கவில்லை.*

**ஸ்ரீ அரவிந்தரின் தத்துவத்தில் பரிணாமம் என்பதே மைய அடிப்படை.**

*தொடரும்....*

* * *

**ஜீவிய மணி**

**பொருள் வரும் பொழுது அருள் உடன் வரும்.**

**ஜீவிய மணி**

**கற்பனையில் பலிக்கும் கருத்திற்கு**
**நடைமுறையில் உயிர் பெறும் உரிமை உண்டு.**

Published by Mr. P.V. Sankar on behalf of The Mother's Service Society, No.5, Puduvai Sivam Street, Venkata Nagar, Puducherry - 605011, Printed by Mr. S. Devanathan at Sakthi Offset Printers, No.238, Lawspet Main Road, Pakkamudayanpet, Puducherry - 605008, Published from Flat No.11, 2nd Floor, Grace Apartments, No.177, Papammal Koil Street, Vaithikuppam, Puducherry - 605012, Editor: Mr. N. Asokan, Secretary, The Mother's Service Society, No.5, Puduvai Sivam Street, Venkata Nagar, Puducherry - 605011.

# பதிலை விட முக்கியமான கேள்வி

'பிறந்தோம், வளர்ந்தோம், இருந்தோம், போவோம்' என்பது சுதந்திரம் வருமுன் இருந்த மனநிலை. தொழிற்சங்கம் அமைக்க இளைஞர்கள் வாழ்வைத் துறந்து வேலை செய்தால், தொழிலாளிகள் அதிகச் சம்பளம் கேட்க மறுப்பார்கள். கேட்டால் வேலை போய்விடும். நமக்கு விதித்தது இதுதான் என்பது மனப்பான்மை. இக்காலத்தில் பிள்ளைகள் பெரிய படிப்பு படிக்க வேண்டும், வீடு கட்ட வேண்டும், அமெரிக்காப் போக வேண்டும் என்ற பரபரப்புள்ளது. பெரும்பாலும் இது போட்டியால் வந்தது. சொந்தமாக வந்தது குறைவு. நான் முன்னுக்கு வர முடியுமா என்ற கேள்வி எழாதவர் பலர். என் ஸ்தாபனம் வளருமா என்ற கேள்வி பொதுவாக எழுவதில்லை. தத்துவமான கேள்வி "நான் யார்?" என்பது தபஸ்விக்குத்தான் எழும். ஓர் அன்பர் 20 கேள்விகளை எழுதினார். எல்லாக் கேள்விகளும் எளிமையானவை. எவரும் கேட்காதவை. 1920இல் பகவான் கூறியது "இந்தியருக்குச் சிந்தனா சக்தி போய்விட்டது". 1950க்கு முன் எந்தப் பள்ளியிலும் 100% பாஸ் வருமா எனக் கேட்கத் தோன்றியதில்லை. ஓரிடத்தில் ஒருவர் அதை ஒரு வருஷம் செய்தும் அக்கேள்வி மற்றவர்க்கெழவில்லை. அவர் செய்ததைத் தொடர நினைக்கவில்லை. "என் வாழ்வு என் முயற்சியால் எந்த அளவு முன்னேற முடியும்?" என்ற கேள்வி ஒருவருக்கு எழுந்தால் அது பலிக்கும் வாய்ப்பு தலையெடுத்து-விட்டதெனலாம்.

பின் பக்க அட்டையில் தொடரும்......

* * *

# பதிலை விட முக்கியமான கேள்வி

.....முன் பக்க அட்டையின் தொடர்ச்சி

1930, 1940 ஆண்டுகளில் இந்தியாவுக்குச் சுதந்திரம் வேண்டும் என காங்கிரஸ் மேடைகளில் பேசுவார்கள். இந்திய மக்கள் அப்படி நினைக்கவில்லை. ஆங்கிலேயனே நெடுநாள் நாட்டை ஆள வேண்டும் என்ற எண்ணம் பரவலாக இருந்தது. சிலரிடம் தீவிரமாக இருந்தது. "நம்மால் நாட்டை ஆள முடியும் என நினைக்கின்றீர்களா?" என்ற கேள்வியை காரசாரமாகக் கேட்ட படித்தவர்கள் ஏராளம். காங்கிரஸில் ஈடுபாட்டுடன் உழைத்தவர் தவிர மற்றவர் நிலையிது. 1947இல் "நாட்டை விட்டுப் போக வேண்டாம்" என வைஸ்ராய்க்குத் தந்தி அனுப்பிய கட்சித் தலைவர்களும் உண்டு. மகாத்மா 1915இல் வந்தார். 1920இல் பிரபலமானார். 1930இல் சத்தியாக்கிரகம் ஆரம்பித்தார். அந்த நாளிலே "நாம் சுதந்திரம் கேட்கிறோம். அப்படி அது வந்தால் நல்ல சர்க்கார் போய் ஊழல் சர்க்கார் அமையும். அது நிச்சயம். ஊழல் சர்க்காரானாலும் சொந்த சர்க்கார் வேண்டும்" என்றார் இராஜாஜி.

**பகவான் 1904இல் நாட்டிற்கு வேண்டியது பூரண சுதந்திரம் என்றார்.**

அது உரிமையை அறியாத காலம். இது உரிமையில்லாததைக் கேட்கும் காலம். மின்சாரத்திற்குப் பணம் கட்ட மறுக்கும் மனநிலை மக்கள் மனநிலை. உரிமையை உணர ஆரம்பித்தால் ஆரம்பத்தில் தலைகீழாக வரும் என்பதால் இதுவும் வரவேற்கத்தக்கதே.

* * *